எனவே ஆசிரியர்களுக்கு நீண்ட விளக்கங்கள் அளித்து அவர்களை சம்மதிக்கச் செய்வது மிகப்பெரிய சவாலாக அவருக்கு அமைந்தது. மாணவர்களை அதிகம் பயன்படுத்தாது ஆசிரியர்களைக் கொண்டு நிகழ்த்துவதனையே அவர் நோக்கமாக கொண்டிருந்தார். நீண்ட இழுபறிகளுக்குப்பின் வேண்டா வெறுப்போடு பலரும் சம்மதித்தனர். எனவே லோங் அடிகள் பிரதி வழங்கி ஒத்திகைகள் ஆரம்பிக்கும் போதே ஞான ஒடுக்கங்கள், தியானங்கள் போன்றவற்றால் ஆசிரியர்களை தயார் செய்தார். எனினும் மிகப்பெரிய சவாலாக 'இயேசுவின் பாத்திரத்தினை யார் ஏற்பது' என்பது கேள்விக்குறியானது யாரும் எற்கச் சம்மதிக்கவில்லை. இயேசுவை பொம்மையைக் கொண்டு சித்தரிப்பதற்கு பலர் ஆலோசனை கூறினார்கள் ஆனால் லோங் அடிகள் தனது கொள்கையில் உறுதியாக இருந்து முயற்சித்து பாடசாலையில் ஆசிரியராக கற்பித்து வந்த இந்து சமயத்தவரான கிருஸ்ணானந்தன் ஆசிரியரை சம்மதிக்க வைத்தார். நீண்ட ஆயத்தங்களுடன் கல்லூரியின் தெற்குப் பக்கமாக அமைந்திருந்த மண் திட்டிகளை அரங்காக பயன்படுத்தி 1952 ஆம் ஆண்டு நாடகம் மேடையேற்றப்பட்டது. யாழ்ப்பாண வரலாற்றில் அந்நாடக மேடையேற்றம் மிகவும் முக்கியமான ஒரு பதிவாகும் அதுபற்றி ஆசிரியர் ஆம்ஸ்ரோங் பின்வருமாறு கூறுகின்றார்.

> இயற்கையான அமைப்பைக் கொண்ட "திட்டி" (Thiddy) பகுதி எங்களுக்கு ஏதுவாக இருந்தது. சில ஆசிரியர்களின் பங்கேற்புடன் பல மாதங்கள் ஜெபமும் ஒத்திகைகளும் நடைபெற்றன. நடிகர்களின் எண்ணிக்கை சுமார் எழுபதாக இருந்தது. 1952 ஈஸ்டர் பண்டிகையின் போது, இருபதாயிரம் முதல் முப்பதாயிரம் வரையிலான யாழ்ப்பாண மக்கள் முதன் முறையாக இந்த 'பாடுகளின் நாடகத்தை' (Passion Play) பக்தியுடனும் கண்ணீருடனும் கண்டுகளித்தனர். 1952 மற்றும் 1954 ஆம் ஆண்டு நாடகங்கள் வரலாற்றுப் பதிவுகளாக மாறிவிட்டன. (The Patrician 1958-1959)

முதல் மேடையேற்றம் ஏற்படுத்திய தாக்கம் ஆயர் அவர்களை மட்டுமன்றி, பாடசாலை ஆசிரியர்கள், யாழ்ப்பாண கிறிஸ்தவ சமூகம் அனைவரையும் இப்படைப்பினை விரும்பச்செய்தன. அதனால் மீண்டும் 1954 ஆம் ஆண்டு ஆசிரியர்களையும் மாணவர்களையும் இணைத்து மேடையேற்றம் செய்யப்பட்டு பலரது பாராட்டுக்களையும் பெற்றது. அப்பாடுகளின் நாடகத்துடனே லோங் அடிகளும் பாடசாலையை விட்டு வெளியேறினார்

அதன் பின்னர் அதிபராக பணியேற்ற அருட்திரு அருள்நேசன் அடிகளாரின் காலத்தில் அவரது அறிவுறுத்தலின்படி 1956 ஆம் ஆண்டு அருட்தந்தை மரியாம்பிள்ளை அவர்கள் பஃப்பலோ (Buffalo) நாடகப் பிரதியைத் தமிழில் மொழிபெயர்த்தார். 1956 ஆம் ஆண்டு மாணவர்களைக் கொண்டே நாடகத்தினை மேடையேற்றினர். ஆசிரியர் ஆம்ஸ்ரோங்க் அவர்களே நாடகத்தினை நெறிப்படுத்தினார் ஆசிரியர்கள் திரு. ஏ. ஊ. கனகரத்தினம் மற்றும் திரு. று. ஞானரத்தினம் ஆகியோர் பக்கபலமாக நின்று நாடக நெறிப்படுத்துலுக்கு உதவினர். நாடகம் மிகப்பெரிய வரவேற்பினைப் பெற்றதாக ஆசிரியர் ஆம்ஸ்ரோங் குறிப்பிடுகின்றார்.

> ...இந்த நாடகம் முந்தைய நாடகங்களை விட மிகச் சிறந்ததாக இருக்க வேண்டும் என்பதில் அனைவரும் முனைப்புடனும் ஆர்வத்துடனும் இருந்தனர். ஒரு வகையில் அது அப்படியே அமைந்தது. அதன் கூட்டுத் தாக்கத்தில், இந்த நாடகம் நிச்சயமாக முந்தைய நாடகங்களை மிஞ்சியது. திரண்டிருந்த பெருந்திரளான மக்கள் ஜெப உணர்வோடும், அமைதியான பக்தியோடும் நாடகத்தைப் பின்தொடர்ந்தனர். பெண்கள் கண்ணீர் சிந்தினர் ஆண்களின் கண்களும் கலங்கின. மொழி தமிழாக இருந்ததால், அது மக்களை இன்னும் அதிகமாகக் கவர்ந்தது. ஆயர் (His Lordship the Bishop)

முதல் நாளில் கலந்துகொண்டு பல மதிப்புமிக்க ஆலோசனைகளை எங்களுக்கு வழங்கினார்.''(The Patrician 58-59)

அருட்தந்தை லோங் அடிகள் பல்வேறு சவால்களுக்கும் மத்தியில் அறிமுகம் செய்த பாடுகளின் நாடகத்தினை ஒரு மாணவனாக எங்கோ ஒரு மூலையில் நின்று பார்வையிட்ட நீ.மரியசேவியர் அடிகளே இப்பாடுகளின் மரபில் மொழிபெயர்ப்பை தவிர்த்து, தமிழில் முதன் முதலாக புதிதாக எழுதி 1964 ஆம் ஆண்டு மன்னாரில் மேடையேற்றினார். அன்றில் இருந்து இன்றுவரை இம்மரபினை திருமறைக் கலாமன்றம் 60 ஆண்டுகள் தாண்டியும் மேடையேற்றி வருவதுடன் பல இடங்களிலும் இந்நாடகம் மேடையேறுவதற்கு காரணமாக இருந்துள்ளது. இத்தகைய உயர்ந்த பாரம்பரியத்தினை இம்மண்ணிலே அறிமுகம் செய்து சாத்தியப்படுத்தியவர் அமல மரித்தியாகியாகிய அருட்திரு லோங் அடிகளே.

**கார்னிவேல் (carnival) அறிமுகம் செய்தது.**

அருட்திரு லோங் அடிகள் புனித பத்திரியார் கல்லூரியில் இருந்தபோது மேற்கொண்ட மற்றுமொரு செயற்பாடு கார்னிவேல் ஆகும். வளர்ச்சியடைந்த நாடுகளில் நடைபெறுகின்ற மேற்படி நிகழ்வானது இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வேறெப்போதும் நடைபெறவில்லை. 'அகில இலங்கை கைத்தொழிற் களியாட்ட விழாவும், சம்மேளனமும்' என பெயரிடப்பட்டு அவ்விழா நடத்தப்பெற்றது. பத்திரிசியார் கல்லூரியின் மைதானம் முழுவதையும் பாடசாலைக் கட்டடங்கள் முழுவதையும் பயன்படுத்தி இக்கார்னிவேல் நடத்தப்பெற்றது. அதாவது கண்கவர் கண்காட்சிகளினதும் களிப்பூட்டும் நிகழ்வுகளின் தொகுதியாகவும் இது நடைபெற்றது. யாழ்ப்பாணமே பெரும் விழாக் கோலம் கொண்டது. சிறுவர் ஆடிக்களிக்கும் இராட்டினங்கள் ஒருபுறம், கண்கவர் சிறுவிளையாட்டு போட்டிகள் ஒருபுறம், இலங்கையின் பிரபல்யம் மிக்க இசைக் கலைஞர்கள் பங்குகொள்ளும் இசை நிகழ்வு ஒருபுறம், பாரம்பரிய நாட்டுக்கூத்து நிகழ்வு ஒருபுறம்,

பல்வேறு விடயங்களின் கண்காடசிகள் ஒருபுறம், மல்யுத்தப் போட்டிகள் ஒருபுறம், விரும்பிய சிற்றுண்டிகளை கொண்ட கடைத் தொகுதிகள் ஒருபுறம் என பாடசாலைச் சூழலே பன்முகச் செயற்பாடுகளிலும் ஒளி வெள்ளத்திலும் மிதந்தது. மக்கள் பல்லாயிரக்கணக்கானோர் சூழ்ந்து பார்வையிட்டனர். அத்தகைய கார்னிவேலை அதற்குப்பின் யாரும் இதுவரை நிகழ்த்தவில்லை என்கின்ற அளவுக்கு லோங் அடிகள் அதனை நன்கு திட்டமிட்டு நடத்தி முடித்தார்

இவை மட்டுமன்றி லோங் அடிகள் யாழ்ப்பாண நூல் நிலையத்தினை அமைப்பதற்கும் பலாலி விமான நிலையத்தினை அமைப்பதற்கும் நிதி உதவிகளைத் தேடிக் கொடுத்து யாழ்ப்பாண வரலாற்றில் யாராலும் மறக்கப்படமுடியாத மிகப்பெரிய ஆளுமையாக திகழ்கின்றார்.

4. **கிறிஸ்தவ இசைமரபிற்கு அத்திவாரமிட்ட அருட்திரு. அதிரியான் யோசவ்**

கலை இலக்கியம் வரலாறு என வரலாற்றில் இடம்பிடித்த சுவாமி ஞானப்பிரகாசரின் அச்சுவேலி கிராமத்தில் அவரது மரபில் இன்னமும் சிறப்பாக சுவாமி அவர்களின் ஆசீருடன் உதித்து குருவாகியவரே அருட்திரு அதிரியான் யோசவ் அடிகள். அவர் ஈழத்தின் கத்தோலிக்க இசை மரபுக்கு ஆற்றிய பங்களிப்பு என்பது மிகவும் முக்கியமானது.

அச்சுவேலியைச் சேர்ந்த யோசேப்புக்கும் அவர் மனைவி இராக்கினிக்கும் குழந்தைப் பிறப்பு மிகவும் தாமதாமாக இருந்ததால் இருவரும் துயரத்தோடு நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசியாரைச் சந்திக்க வந்தார்கள். சுவாமி ஞானப்பிரகாசிரியார் இராக்கினியின் மாமனாவார். அவரிடம் தம்பதியர் ஆசீர்பெற்ற போது சுவாமி ஞானப்பிரகாசிரியர் பாலன் இயேசு சுருபத்தை அவர்களிடம் கொடுத்து “உங்களுக்கு ஒரு மகன் பிறப்பார்” என்றார். அவரது தீர்க்க தரிசனம் விரைவிலே நிறைவேறியது. அதிரியான் அவர்கள் இருவருக்கும் தலைமகனாக 1924ம் ஆண்டு தை மாதம் 9ம் திகதி

பிறந்தார். அதிரியானை தந்தை அன்போடு வளர்த்து சிறந்த கல்விமானாக படித்துப் பட்டம் பெற்றுத் திகழ வேண்டுமென்று ஆசை கொண்டிருந்தார்.

அதிரியான் அவர்களின் தந்தையார் வரி மேற்பார்வை உத்தியோகத்தராக பணியாற்றியதன் காரணத்தினால் கொழும்பு, மலை நாடு, மட்டக்களப்பு போன்ற இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற போதெல்லாம் அதிரியானின் கல்வி பாதிக்காத வண்ணம் வித்தியாலயங்களில் சேர்த்து கற்பித்து வந்தார். மூன்று வயதிலிருந்தே தாயிடம் ஆங்கில மொழியைக் கற்று, அன்னையுடன் ஆங்கிலத்திலேயே உரையாடும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டவர், பல்வேறு இட மாற்றங்களினால் சிங்கள மொழியையும் கற்றுக்கொண்டார். புனித பத்திரிசியார் கல்லூரி விடுதியிலும் சேர்ந்து கற்கும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது அதனால் அதிரியான் அவர்கள் அருட்திரு.லோங் அடிகள், அருட்திரு ஜோன் மத்தியூ அடிகள் ஆகியோரின் வழி காட்டலையும், பெற்றுக் கொண்டார். எழுத்து, வாசிப்பு, உரையாடல் ஆகியவற்றை தாயிடம் பிறமொழியிலும் கற்றுக்கொண்டார். தொடர்ந்து குருவாகும் வாஞ்சையோடு குருத்துவக் கல்வியை கொழும்பில் தொடர்ந்தார்.

இறை ஊழியத்தில் தகுந்த விதமாக கற்றது மட்டுமன்றி திட்டமிட்ட வாழ்வு புலனடக்கம், ஒழுங்குக்கிரமம், புண்ணியங்கள் என்பவற்றில் வளரத் தீவிர முயற்சி எடுத்தார். புண்ணியங்களில் வளர தவ வாழ்வை முனைப்புடன் கடைப்பிடித்தார். தத்துவ இயலுடன், இறை இயலைக் கற்று அக்காலத்திலேயே தமிழில் பாடல்கள் இயற்றி, இராகங்கள் வகுத்து, திரு வழிபாடுகளைச் சிறப்பிக்க ஆரம்பித்த பெருமை அடிகளாரையே சாரும். அவர் 1949 இல் நித்திய வாக்குத்தத்தத்தை அளித்து, அதி வந்தனைக்குரிய கைமர் ஆண்டகை அவர்களினால் 1951 ஆம் ஆண்டு, ஆவணி மாதம் 6ஆம் திகதி அமலமரித்தியாகிகள் சபையின் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

குருவாகிய அடிகளார் ஆரம்பத்தில் கொழும்பிலும் நீர் கொழும்பிலும் பணியாற்றினார் தனது மேற்படிப்புக்காக உரோமாபுரி சென்று, வேதாகமத்தில் ஊன்றியவராக கலை ஞானங்களையும், பிற மொழிகளையும் கற்றுத் தேறினார். இலத்தீனிலும், ஆங்கிலத்திலும், தமிழிலும், முதுகலைஞராகவும், எபிரேயம், கிரேக்கம், ஐரோப்பிய மொழிகளில் தேர்ச்சி பெற்றது மட்டுமன்றி தென்னிந்திய மொழிகள், மற்றும் சிங்களத்திலும் திறமை பெற்றவராகவும் சிறந்த கல்விமானாகவும், கலை இலக்கியங்களில் சிறந்த வல்லுனராகவும் ஆளுமையுடன் இலங்கைக்கு வந்தவர், தலைநகரில் ஆர்வமுடன் பணியாற்றினார். ஆரம்பத்தில் நீர்கொழும்பு பங்கிலும், கொழும்பு ஆசனக் கோவிலிலும் பங்குத் தந்தையாகக் கடமையாற்றினார். இவரது பணிகளையும் ஒழுக்கச் சிறப்பையும் கண்ட சபையின் முதல்வர் அவரை நுகேகொடை குருமடத்தின் அதிபராக நியமித்தார்கள். குருமடத்தில்மாணவர்களின்படிப்பில்மிகவும்அக்கறையுடனும், பொறுப்புடனும் கடமையாற்றினார். எல்லா இசைக் கருவிகளையும் அவர்களுக்கு கற்றுக் கொடுத்தார். அதன் பின்பு தான் யாழ்ப்பாணத்திற்கு நியமிக்கப்பட்டார். கொழும்புத்துறை புனித வளனார் சிறிய குருமட அதிபராக நியமிக்கப்பட்டு யாழ்ப்பாணத்திலேயே இறுதிவரை பணியாற்றினார். அவரது 50 வருட குருத்துவ சேவைக்காலத்தில் 40 வருடங்கள் குருத்துவ மாணவ உருவாக்கத்திலேயே கழிந்தமை குறிப்பிடத்தக்கது.

**இசைப்பணி**

அருட்திரு அதிரியான் அடிகள் ஒரு சிறந்த இசை மேதை, இசைக் கலைஞர், இசையமைப்பாளர் மற்றும் ஓர்கனிஸ்ட் (Organist) ஆக இலங்கை முழுவதும் நன்கு அறியப்பட்டிருந்தார். இந்தத் துறையில்தான் அவர் இலங்கைத் திரு அவைக்குப் பெரும் பங்காற்றினார். தமிழ் கிறிஸ்தவ இசைப் பாரம்பரியத்தில், குறிப்பாக இலங்கையின் தமிழ் கத்தோலிக்க திரு அவையின் திருவழிபாட்டு இசை வளர்ச்சியில் அருட்திரு அதிரியான் யோசவ் அடிகள் மிக முக்கியமான ஆளுமையாவார்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பிந்தைய காலத்தில், திருவழிபாட்டில் தாய்மொழியான தமிழின் பயன்பாடும் கீழைத்தேயப் பண்பாட்டு இசையின் இணைப்பும் முதன்மை பெற்றபோது, இறை வழிபாட்டை மக்கள் மயப்படுத்திய இசையால் வளப்படுத்திய முன்னோடிகளுள் இவரும் ஒருவர். இலங்கைத் திருச்சபையின் வழிபாட்டில் பயன்படுத்துவதற்காக தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் பல தாய்மொழிப் பாடல்களை உருவாக்கி, அவற்றை கீழைத்தேச (ஸ்வர) இசையில் அமைத்த முன்னோடிகளில் இவரே முதன்மையானவர். இவற்றின் முக்கியத்துவம் குறித்து 'கத்தோலிக்க மெசஞ்சர்' (Catholic Messenger) இதழில் பல கட்டுரைகளை எழுதினார். "இலங்கைத் திரு அவை இசையை உருவாக்குதல்" ("On creating a Ceylon Church Music") என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரையில், மேற்கத்தேய மற்றும் கீழைத்தேய இசை அமைப்புகள் இரண்டிற்கும் தனித்தனி சிறப்புகள் உள்ளன, ஆனால் ஒரு நாட்டின் வழிபாட்டு முறைக்கு மிகவும் பொருத்தமான இசை அந்த நாட்டின் இசையே ஆகும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

**திருவழிபாட்டு இசைப் புதுப்பிப்பு (Liturgical Music Renewal):**

திரு அவையின் திருப்பலி, நற்கருணை வழிபாடுகள் மற்றும் சிறப்புப் பெருவிழாக்களுக்குரிய பாடல்களுக்குத் தமிழ் பண்பாட்டிற்கும் பண்ணிசைக்கும் ஏற்ற முறையில் மெட்டமைத்து வழங்கினார். மேலைத்தேய மரபிலிருந்து விலகி, தமிழ் மக்களின் உணர்வுகளுக்கும், இசை மரபுக்கும் ஏற்ற வகையில் திருவழிபாட்டுப் பாடல்களை வடிவமைத்தார். கர்நாடக இசை ராகங்களையும், எளிமையான மெல்லிசைப் பண்ணையும் இணைத்து, சாதாரண மக்களும் எளிதாகப் பாடும் வகையில் பாடல்களை அமைத்தார். அதுமட்டுமன்றி ஆன்மிக அமைதியையும், ஆழமான பக்தி உணர்வையும் தூண்டும் ராகங்களையும் தாளக் கட்டுகளையும் தன் இசையில் கையாண்டார். நற்கருணைப் பாடல்கள் (Eucharistic Hymns) மரியன்னைத் துதிப் பாடல்கள், தவக்காலம் மற்றும் உயிர்ப்புப் பெருவிழாப் பாடல்கள் எனப் பல தளங்களில் இவர்

ஆற்றிய இசைப் பணி இன்றளவும் தேவாலயங்களில் பக்திப் பரவசத்துடன் பாடப்பட்டு வருகின்றது.

ஆரம்பத்தில் அவர் பாரம்பரிய இலத்தீன் பாடல்களை அவற்றின் மூல மேற்கத்திய மெட்டையும் இசையையும் மாற்றாமல், தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் மொழிபெயர்க்கத் தொடங்கினார். இது சிங்களவர், தமிழர் இருசாராரையும் உள்ளடக்கிய முழு சமூகமும் வழிபாடுகளின் போது ஒரே பாடலை ஒரே நேரத்தில் அவரவர் மொழிகளில் பாட வழிவகுத்தது. பின்னர் அவர் மெதுவாக தனது இசை அமைப்புகளில் கீழைத்தேச இசை மற்றும் மெட்டுகளை அறிமுகப்படுத்தினார். அதற்குப் பின்னர், இலங்கையின் நாட்டுப்புறப் பாடல் வடிவங்களையும் மெட்டுகளையும் தழுவி, தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் தனது புகழ்பெற்ற "நற்செய்தி கரோல்கள்" (திருமுறைகளை அடிப்படையாகக் கொண்ட கரோல் பாடல்கள்) பாடல்களை இயற்றினார். இதன் தமிழ் வடிவம் "இதய வீணை" என்றும், சிங்கள வடிவம் "ஹதே வீணை" என்றும் அழைக்கப்பட்டது. பல மொழிகளைப் பேசும் கிறிஸ்தவ சமூகங்களில் சபையோர் இணைந்து பாடுவதை ஊக்குவிப்பதே இவரது முதன்மை நோக்கமாக இருந்தது. பல இசை வல்லுநர்களின் கூற்றுப்படி, அவர் இசையமைத்த 'சிங்கள உயர் திருப்பலி' (Sinhala High Mass) மிகப்பெரிய நன்மதிப்பையும் தாக்கத்தையும் ஏற்படுத்தியது. அவர் தான் இசையமைத்த சில சிங்களப் பாடல்களைப் பொதுப் மேடையில் பாடியும் காண்பித்தார். தமிழில் அவர் எழுதிய திருவருகைக்கால "மணிகள் தொனிக்குதே" என்ற பாடல் இலங்கை முழுவதும் இன்றுவரை பாடப்படுவது குறிப்பிடத்தக்கது.

திருப்பலியின் முதல் வாசிப்பிற்குப் பின்பு தொடர்பில்லாத பாடல்களைப் பாடுவதைத் திரு அவை தடைசெய்தபோது, இவர் கீழைத்தேச மெட்டுகளில் "பதில் உரைப்பாடல்கள் மற்றும் தொடர் பாடல்களை" (Responsorial Psalms and Sequences) இசையமைத்து வெளியிட்டார். தான் இசையமைத்த அனைத்துப் பாடல்கள் மற்றும்

திருப்பாடல்களுக்கான இசைக் குறிப்புகளையும் (Musical Notations) அவர் வெளியிட்டார். தனது இசையமைப்புகளைப் பரப்புவதற்காக, அவர் நுகேகொட மற்றும் கொழும்புத்துறை ஆகிய இடங்களில் உள்ள குருமட இளையோருக்குப் பயிற்சியளித்ததுடன், பங்குப் பாடகர் குழுக்களின் பயிற்சிக்கு உதவும் வகையில் ஒலிநாடாக்களையும் (Cassettes) தயாரித்தார். இவ்வாறு திரு அவையின் இசைக்கும், வழிபாட்டு புதுப்பித்தலுக்கும், அருட்திரு அதிரியான் அடிகள் ஆற்றிய பங்களிப்பை அவ்வளவு எளிதில் யாரும் மறந்துவிட முடியாது.

திருவிவிலியத்திலிருந்து திருப்பாடல்களைத் தெரிந்தெடுத்து, அவற்றின் பொதுவானதும், ஒத்தமை கொண்டதும், சிறப்பானதுமான பகுதிகளை புறம்பே எடுத்து அவற்றினை பாடல்களாக இயற்றி, இராகங்களை மீட்டு, குருமாணவர்களுக்கு பயிற்றுவித்து அவர்கள் பாடும் போது தானே இசைக்கருவி மீட்டி ஒலிப்பதிவு செய்தும் புத்தக வடிவிலும் வெளியிட்ட பெருமையும் அடிகளாரையே சாரும். ‘இறைவழி இசையாரம்’ என்ற பெயரில் அவை தொடராக வெளியிடப்பட்டன. அவற்றினை கீழைத்தேச இசையுடன் மனதுக்கு இதமாகவும், தியானம் செய்து இறைவனை வேண்டி வழிபடக் கூடிய முறையில் எழுதி வெளியிட்டார். திருமறை வழிபாட்டு நாட்காட்டிக்கேற்ப முக்காலத்திலும் பாடக்கூடிய முறையில் ஒழுங்குபடுத்தி எழுதி வெளியிட்டார். அதன் பொருளை விளக்கமுடன் எழுதி ‘யாவேக்கு யாழ் பண்ணிசைப்போம்’’ என்று தலைப்புக் கொடுத்தார். அதற்கான விளக்கப் புத்தகங்களையும் எழுதி வெளியிட்டார். குருமாணவர்களின் உதவியுடனும், ஒலி நாடாக்களை பங்குகளில் இறைவார்த்தையினை அடிப்படையில் இயற்றப்பட்ட திருப்பாடல்களை பயிற்றுவித்துப் பரப்பினார்.

இத்திருப்பாடல்களுக்கு கொடுத்த இசை, இராகம், இசைக் குறிமானங்கள் அவருடைய சொந்த ஆற்றலில் பிறந்தவையே. அதைத் தொடர்ந்து மேலும் பல பாடல்களையும், தூய பிரான்ஸிஸ் சவேரியாரின் விருது வாக்குடன் கூடிய பாடல்களையும், தூய யோசவ் குருமட மாணவர்களின்

அழைப்பை ஊக்குவிக்ககூடிய சில பாடல்களையும் அடிகளார்; எழுதி., இசை அமைத்து, அதற்குரிய இராகத்துடன் பழக்கியும், பயிற்றுவித்தும் சென்றுள்ளார். இவற்றைப் பாடும் குருமாணவர்கள் அப்பாடல்களின் உட்பொருள் விளக்கம் கண்டு மெய்மறந்து போகின்றனர்.

**அவரது ஏனைய எழுத்துப்பணிகள்**

அவர் பணிக்காலத்தில் விவிலியத்துக்கான விளக்க உரைகளையும், ஆழமான இறையியல் கருத்துக்களையும் எழுதினார். அதுமட்டுமன்றி திருத்தூதர் பணி விளக்க உரையையும், தூய பவுல் அப்போஸ்தலரின் கடிதங்களின் விளக்கங்களையும், எழுதினார். அவை இறையியல் கற்கும் மாணவர்களுக்கு பேருதவியாகவும், நல்லறிவு புகட்டுவதாயும் அமைந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக அவர் எழுதிய 'ஒப்பியல் அகராதி' Lexicon Glossary மிகவும் முக்கியமானது.

ஆங்கில பிற மொழிகளுக்கு தமிழில் கருத்து, விளக்கமுள்ள அகராதியாக அதனை எழுதினார். மொழி விளக்கம் கொண்ட ஆங்கிலம் தமிழ் மொழிபெயர்ப்பை எழுதி 2000 ஆண்டளவில் முற்றுப் பெற வைத்தார். இவ் அகராதியில் பிற மொழிக் கருத்துக்கள் அடங்கியும், தத்துவ இயல், இறை இயல் பதங்கள் கூடுதலாகவும் சேர்க்கப்பட்டுள்ளன. அவர் தனது பொருளாதாரப் பலத்தைக் கொண்டு இடைவிடா முயற்சியுடன் நெருக்கடி, புலப்பெயர்வு நிலைமைகளை யெல்லாம் எதிர் கொண்டு சமாளித்து சற்றும் தளராது முன்னெடுத்துச் அதனை நிறைவு செய்து சென்றுள்ளார். தான் கற்றுத் தேறிய அனுபவங்களுடனும், பட்டறிவின் வழிகாட்டலோடும் எவ்விதப் பிரச்சனைகளையும் தெளிவறிவுடன் அணுகி, மிகுந்த புலமையைப் பாவித்து. அவற்றை விளக்கி தமிழ் மொழிக்குள்ள பல்வேறு பரிமாணங்களையும் தனதாக்கி அகராதி வரிசையில் தமிழை செழிப்புறச் செய்திருக்கின்றார். தமிழ்த் தொண்டராகிய தனிநாயகம் அடிகள், தாவீது அடிகள் போன்றோருடனும் மிகுந்த நட்புக்கொண்டு வாழ்ந்த அதிரியான் அடிகளாரின் பணியும் அவர்களின் பணியுடன் இணைந்து நிற்கின்றது.

மொத்தத்தில் அருட்திரு அதிரியான் யோசவ் அடிகள் இயற்றிய மற்றும் இசையமைத்த பாடல்கள், வழிபாட்டுச் சூழலில் இறைமக்களின் செப அனுபவத்தை ஆழப்படுத்தியதோடு, தமிழ் கிறிஸ்தவ இசை வரலாற்றில் ஒரு அழியாச் சுவட்டையும் பதித்துள்ளன.

### 5. கத்தோலிக்க இலக்கியத்திற்கு பங்களிப்புச்செய்த அருட்திரு. ம. பாவிலுப்பிள்ளை அடிகள்

சின்ன ரோமை என அழைக்கப் பெற்ற, சில்லாலையில் இறை பக்திமிக்க குடும்பத்தில் பாவிலுப்பிள்ளை அடிகள் 1921ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 19ஆம் திகதி பிறந்தார். 1952ஆம் ஆண்டு ஆடிமாதம் 6ஆம்திகதி உரோமபுரியில் அமலமரித் தியாகியாக, குருப்பட்டம் பெற்றார். அவர் தன்னைப் பெருமையாக 'பாவிலு புத்திரன்' என்று அழைப்பார். தத்துவ சாஸ்திரம், இறையியல் சாஸ்திரம் போன்றவற்றை பட்டப்படிப்பின் பாடத் துறைகளாக கற்றுச் சிறந்த இவரது வாழ்வு முறைமையே இயற்கையோடு இணைந்ததாக இருந்தது. சிறந்த பிரசங்கியாக விளங்கியது மட்டுமன்றி தபோதன வாழ்வுக்குரிய வாழ்வொழுக்கத்துடன் வாழ்ந்தவர். அதனால் இவரை "நகர சன்னியாசி" என்றும் அழைத்தனர். அக்காலத்தில் பணிபுரிவது சிரமம் என்ற கருதப்பட்ட அரிப்பு, முள்ளிக்குளம், முருங்கன், புதுக் குடியிருப்பு போன்ற பங்குகளில் சிறப்பான பணிபுரிந்தார்.

இலக்கியத்துறையிலும் கணிசமான பங்களிப்பினை வழங்கியுள்ளார். ஆயர் எட்மன் பீரிஸ் ஆண்டகையின் வேண்டு கோளுக்கு இணங்கி திருக்குறளையும் திருவிவிலியத்தையும் ஒப்பீட்டாய்வு செய்துள்ளார் திருக்குறளும் திருவிவிலியமும் தொகுதி i, தொகுதி ii என்ற பெயரில் அவர் எழுதியுள்ள இரண்டு தொகுதி நூல்களும் இன்று பலராலும் மதிக்கப் பெறுகின்றது. அவர் தனது அனுபவத்தினை "வள்ளுவக் குறளின் விரிவான விளக்கத்தினை இந்நற்செய்தி ஒளியிலேயே தெளிவாகக் காணமுடியும்" என்ற குறிப்பீடுகின்றார். அதுமட்டுமன்றி யோசவ்வாஸ் முனிவரின் வாழ்க்கை வரலாற்றினை 'யோசவ்வஸ் தேசிய செயலகத்தின்' வேண்டுகோளுக்கு

அமைய, பாரிய முயற்சி எடுத்து ஆராய்ந்து வெளிப்படுத்துகின்ற 'யோசவ்வாஸ் முனிவரின் சரிதை' என்ற பெயரில் எழுதினார். இந்நூல் நூல் முனிவரின் வாழ்க்கை வரலாற்றினை சிறப்பாகக் கூறுகின்ற முதல் தமிழ் நூல் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் யோசவ்வாஸ் முனிவரின் யாழ்ப்பாண வாழ்வு வரலாற்றினை தேடி வந்த தீரன் (யோசவ்வாஸ் நாடகம், யாழ்ப்பாணப் படலம்) என்ற பெயரில் வரலாற்று நாடகமாக எழுதி வெளியிட்டுள்ளார்.அவரது நாடக ஆக்கத்திறனுக்கு சாட்சியாக அந்நாடகம் திகழ்கின்றது.

அது மட்டுமன்றி சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் காலங் காலமாகப் பாடப்பட்டு வந்து வழக்கொழிந்த பாடல்களை பெரும் சிரத்தையுடன் தேடிக்கண்டுபிடித்து 'சில்லாலை மருந்து மாதா ஆலயத்து அருட்பாக்கள்' என்னும் நூலாக தொகுத்து ஒரு ஆவணமாக்கியுள்ளார். இவற்றிற்கப்பால் சுவாமி ஞானப்பிரகாசரின் நூல்களை தொகுத்துப் பாதுகாத்ததுடன் அவரால் முடிக்கப்படாமல் இருந்த 'யாழ்ப்பாணத் திருச்சபை சரித்திரம்' போன்றவற்றினை முடித்து நூலாக்கியதும் குறிப்பிடத்தக்கது. பாவிலுப்பிள்ளைச் சுவாமி அவர்கள் ஒரு கீழைத் தேசத்தின் ஞானியைப் போல வாழ்ந்து மறைந்தாலும் அவரது சிந்தனைகளும் படைப்புக்களும் என்றும் பேசப்படும் என்பது உறுதி.

**வாழும் கலைஞர்கள் இலக்கியவாதிகள்**

தற்போதும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பல கலை இலக்கிய வாதிகளான அமலமரித் தியாகிகளை நாம் அறிவோம் விரிவஞ்சி அவர்கள் பற்றி எழுதுவது தவிர்க்கப்படுகின்றது. உதாரணமாக அருட்திரு சா. ம. செல்வரட்ணம் (கரவையூர்ச் செல்வம்)அமதி, அருட்திரு வின்சன் பற்றிக் அமதி, அருட்திரு செபமாலை அன்புராசா அமதி, அருட்திரு ப. விமல்ராஜன், அருட்திரு ஸ்ரனி அன்ரனி அமதி, அருட்திரு ரமேஸ் அமதி, எனப் பல கலை இலக்கிய ஆளுமை மிக்க குருக்களை சம காலத்தில் காண்கின்றோம். அளவிறந்த கலை இலக்கியங்களை அவர்கள் படைத்துக் கொண்டிருப்பது மட்டுமன்றி கலை இலக்கியம்

படைப்பதற்கு பல கலைஞர்களுக்கும் நிறுவனங்களுக்கும் தூண்டுகோலாக நிற்கின்றனர்.

**முடிவுரை**

இருநூறாண்டு வரலாற்றினை அமலமரித் தியாகிகள் நினைவு கூரும் இக்காலத்தில். அவர்கள் ஆற்றிய பணிகளை நன்றியோடு நினைந்து வாழ்த்துவது எம் ஒவ்வொருவரினதும் தலையாய பணியாகும். ஆன்மீகப் பணிகளை தமது முக்கிய பணியாகக் கொண்டிருந்தாலும், கலை இலக்கியங்கள் மூலமாக அவர்கள் பல பணிகளை ஆற்றியுள்ளனர், ஆற்றிக் கொண்டும் இருக்கின்றனர். அவர்களது படைப்புக்களை நோக்கும் போது அவை கத்தோலிக்க சமயத்துக்கு மட்டுமன்றி சமகால வாழ்வியலுக்கும் தமிழ்ப் பாரம்பரியத்திற்கும், இலங்கை மண்ணுக்கும் அணிசேர்த்து நிற்கின்றன என்பது நிதர்சனமான உண்மை. "அடங்கிய ஆற்றலுடன் எரியும் திரிகள் எனக்கு வேண்டாம் என் சபைக்கும் வேண்டாம். நீங்கள் எரியவேண்டும் கொழுந்துவிட்டெரிய வேண்டும் சூடுதரவேண்டும். ஒளி கொடுக்க வேண்டும் அல்லது வெளியே செல்லவேண்டும்" என்ற புனித யூஜின் டி மசனற் அவர்களின் வாக்குக்கமைய ஒளிரும் குருத்துவக் கலைஞரை எம் தேசத்தில் பிறப்பிக்க அமலமரி அன்னையை வேண்டுவோம்.

**துணைநூல்கள்**

Jesuthasan Philips,; Our Tribute', Volume III, Part-2, Oblate Study Club, Ampitiya

'சில்லாலையம்', சில்லாலை புனித கதிரை மாதா ஆலய 60 தாவது சிறப்பு மலர்

'நானே குற்றவாளி', லூாயிஸ் டெய்சி அடிகள்

'மரணித்துவள் மகள்' லூாயிஸ் டெய்சி அடிகள்

'பிரசங்கியாத பிரசங்கம்' – லூாயிஸ் டெய்சி அடிகள்

அடைக்கலமுத்து, ச., 1975, ‘நெஞ்சே நினை’, யாழ்ப்பாண மறை மாவட்ட இலக்கிய கழகம்.

அந்தனி ஜான் அழகரசன், வே., 1981, ‘சுவாமி ஞானப்பிரகாசர் சிந்தனையம் பணியும்’ பதிப்பாசிரியர் கா.

இந்திரபாலாரூபவ் யாழப்பாணம் ஞானப்பிரகாசியார் நினைவு விழா அமைப்புக்குழு

செபமாலை அன்புராசா, 2001, ‘மறைப்பணி புரிந்த மாமேதை’, யாழ். மாகாணம், அமலமரித் தியாகிகள்.

Rev. Fr. Gnaprakasar, S., 2011, ‘CodexHistoricus and Diary of the Nallur Mission’, Edited by Ganamuthu

Pilendran, Jaffna, Amathi Publications, Thodarpagam.

முதலியார் குலசபாநாதன், 1975, ‘நற்பணி புரிந்த ஞானி’, திருநெல்வேலி, ஞானப்பிரகாசர் ஆச்சிரமம்

Anton Matthias,1991 ‘The Catholic Church in Jaffna 1875-1925’, Jaffna, Good Shepherd Centre.

The patrician 58-59, St.Patricks Collage, Jaffna.

Jesuthasan Philips, ‘Our tribute’, A supplement (1990-2009)

செ. நீக்கிலாஸ், ‘அருட் தந்தை அதிரியான் யோசவ்’

‘அருட்பணி பாவிலுப்பிள்ளை’, மா.ம.தி .ரூபவ் (முதலாமாண்டு நினைவு மலர்)

# எழுத்தால் நற்செய்தியைப் பகிர்ந்திடுவோர்

**சகாயதாசன் விமல்ராஜ், அமதி**
LPh (Rome)
உதவிப் பங்குத்தந்தை
புனித திரேசாள் ஆலயம்,
கிளிநொச்சி

**அறிமுகம்**

“எரியாத திரிகளால் பயனேதும் இல்லை” என்றார் அமலமரித்தியாகிகள் சபை ஸ்தாபகரான புனித இயூஜின் டி மசெனட். தம்முடைய சபையில் இருப்போர், மற்றும் தம்முடைய சபையில் இணைந்து பணியாற்ற விரும்பும் ஒவ்வொருவரும் தமக்கே உரித்தான திறன்களைக் கொண்டு எரியும் திரிகளாக மாறி சபை அங்கத்தவர்களுடன் அன்புறவுடன் இருக்கவும், மக்களை இறைவனிடம் கொண்டுவரும் கருவிகளாகத் திகழவேண்டும் என்பதும் எமது ஸ்தாபகரின் எண்ணமாக இருந்தது.

அவருடைய நோக்கத்தையும், ஆலோசனைகளையும் மற்றும் வழிகாட்டல்களையும் சிரமேற்கொண்டு இறைபணியாற்ற அமலமரித்தியாகிகள் உலகெங்கும் புறப்பட்டனர். இலங்கையில் புனித ஜோசப் வாஸ் அடிகளாருடைய மறைப்பணியின் பின்னர், ஆயனில்லா ஆடுகளைப்போல் இருந்த மக்களை இறைவன் கருணையுடன் கண்ணோக்கி, தம் அமல அன்னையின் புதல்வர்களாகத் தம் வாழ்வை முழுவதும் அர்ப்பணித்திருந்த அமலமரித்தியாகிகளை அனுப்பினார்.

இலங்கை வந்த அமலமரித்தியாகிகளும் மக்களின் மனங்களில், குடும்பங்களில், சமூகங்களில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டுமென்பதற்காக அயராது உழைத்தார்கள். மறைப்பணி மட்டுமல்லாது, கல்விப்பணி, சமூகப்பணி, கலைப்பணி மற்றும் உள்ளூர் மொழிகளை வளர்க்கவும் ஆர்வம் கொண்டு அயராது உழைத்தார்கள். உதாரணமாக, மறைப்பணி புரிய வந்த அருட்தந்தை டெஸி, பங்குப் பணியைச் செவ்வனே செய்ததோடு, தமிழை நன்கு கற்று தமிழிலே குறுநாவல், சிறுகதை, நாடகம் என்பவற்றை எழுதி மறைப்பணியும் தமிழ்ப்பணியும் ஒன்றுசேரப் புரிந்தார். எமது கத்தோலிக்கத் திரு அவையின் தூண்களாகத் திருத்தூதர்கள் திகழ்வதைப்போல, இன்று இலங்கை திரு அவையில் அழகாய் உயர்ந்து மிளிரும் பல மறைமாவட்ட

திரு அவை தோட்டங்களின் அத்திவாரங்களாகவும், ஆணி வேர்களாகவும் அமலமரித்தியாகிகள் திகழ்ந்தார்கள் என்று கூறலாம்.

200 ஆண்டுகளைக் கடந்தும் இன்றும் அமலமரித்தியாகிகள் இலங்கையின் பல மறைமாவட்டங்களில் பல்வேறுபட்ட பணித்தளங்களில் மத இன வேறுபாடின்றி பணியாற்றி, மறைமாவட்டங்களின் வளர்ச்சிக்காகவும், கத்தோலிக்க மக்களின் விசுவாச வாழ்வுக்காகவும் உறுதுணையாய் நிற்கின்றார்கள். அந்தவகையில், இந்தக் கட்டுரையானது இலங்கையின் எழுத்துத் துறையிலே வட மாகாண அமலமரித்தியாகிகளின் பங்களிப்பைப் பற்றி ஆராய்கின்றது. அதிலும் யாழ். சுதேச அமல மரித்தியாகிகளின் பங்களிப்பை மாத்திரம் இக்கட்டுரை விவரிக்கின்றது.

**நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், அமதி**

ஈழத்தில் தமிழ் வளர்த்து, சமயத் தொண்டாற்றிய பெருந்தகைகளுள் ஒருவராக நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் விளங்குகின்றார். இவருடைய வாழ்க்கை, சமயத்தொண்டு, தமிழ்த்தொண்டு என்பவற்றைப் பற்றி மட்டும் சுமார் 23 நூல்கள் இதுவரையில் வெளிவந்துள்ளன. ஆகவே இவரைப்பற்றிய பெரிய அறிமுகம் தேவை இல்லை. எனினும், இக்கட்டுரையின் முழுமையைக் கருத்தில் கொண்டு, இவரைப்பற்றிய வாழ்க்கை வரலாறு மிகமிகச் சுருக்கமாக இங்கே தரப்படுகின்றது.

சாமிநாதப்பிள்ளை ஞானப்பிரகாசர் 1875.12.22ம் திகதி சாமிநாதப்பிள்ளை தங்கமுத்து தம்பதியினரின் மகனாகப் பிறந்தார். வைத்தியலிங்கம் எனும் இயற்பெயரை கொண்ட இவர், மானிப்பாயில் பிறந்தார். மானிப்பாயிலும், அச்சுவேலியிலும் ஆரம்பக் கல்வியைப் பெற்றுப் பின்னர் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்வி பயின்றார். தமது 20வது வயதில் புனித மடுத்தீனார் சிறிய குருமடத்தில் இணைந்து, தமது 26வது வயதில் 1901.12.01ல் அமலமரித்தியாகிகள் சபைக் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

**பல்துறை வித்தகர்**

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின் எழுத்துப் பணியானது சமயம், சமூகம், வரலாறு, தமிழ், மொழி ஆராய்ச்சி, மற்றும் கலை கலாசாரம் என பல்வேறுபட்ட துறைகளாக

வியாபித்திருந்தது. இவருக்கு மேற்குறிப்பிட்ட துறைகளில் இருந்த அறிவை இவர் எழுதிய நூல்களும், வெளியிட்ட நூல் களும், பிரசுரங்களும், ஆய்வுக் கட்டுரைகளும், பிரசங்கங்களும், கையெழுத்துப் பிரதிகளும் வெளிக் கொணர்ந்தன. அவ்வகையில் சுமார் 131 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

சுவாமி ஞானப்பிரகாசரின் பணிகளில் எல்லோராலும் போற்றப்படுகின்ற பணியாக அவருடைய மொழியியல் ஆய்வுப்பணி விளங்குகின்றது. சமயப் பணிகளைக் கடந்து, ஆற்றப்பட்ட பணியாக இவருடைய இப்பணி அமைந்திருக்கின்றது. அந்தவகையில் தமிழ்மொழி சார்ந்த 14 (இந்த 14 நூல்களில் 03 கையெழுத்துப் பிரதிகள், அச்சேறாதவை) நூல்களை வெளியிட்டார். அவற்றில் 07 நூல்களைத் தமிழிலும், ஏனைய 07 நூல்களை ஆங்கில மொழியிலும் வெளியிட்டார். மேலும், தமிழ்மொழி ஆராய்ச்சிக்கு வலுச்சேர்க்கும் வகையில் 11 மொழியியல் ஆய்வுக் கட்டுரைகளையும் ஆங்கில மொழியில் வெளியிட்டார். இவற்றையெல்லாம் கடந்து, சிறப்பான படைப்பாக, அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற நூலாக 'சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி' எனும் நூல் விளங்குகின்றது. இது, தமிழ் அகராதியியல் வரலாற்றில் வெளிவந்த முதல் சொற்பிறப்பு அகராதியாகத் திகழ்கின்றது என்று தமிழ்நாட்டைச் சேர்ந்த பேராசிரியரும் அகராதி இயலாளருமான பெ. மாதையன் குறிப்பிடுகின்றார்.

இவருடைய வரலாறு மற்றும் மொழி தொடர்பான ஆராய்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது போராசிரியர் அ. சண்முகதாஸ் இவ்வாறு குறிப்பிடுகின்றார். "அவருடைய ஆராய்ச்சி தமிழர் வரலாறு, யாழ்ப்பாண வரலாறு, தொல்பொருளியல், மொழியியல் ஆகிய துறைகள் தொடர்பாக நடைபெற்றது. வழிநடத்துவதற்கு இத்துறை சார்ந்த விற்பன்னர்கள் எவரும் இல்லாத அக்காலகட்டத்திலே, தானாக முயன்று ஆய்வு நெறிகளையும் நுட்பங்களையும் அமைத்துக் கொண்டு பணியாற்றிய விடயம் அறிஞர்களுடைய கவனத்தை ஈர்த்துள்ளது. இந்த நூற்றாண்டின் ஆரம்பகாலத்து ஈழத்து வரலாற்றாசிரியர்களுள் வைத்தெண்ணக் கூடியவராக சுவாமி ஞானப்பிரகாசர் திகழ்ந்தார்."

வரலாறு மற்றும் தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட்டாலும், கத்தோலிக்க சமயம் சார்ந்த நூல்களை எழுதத்

தவறவில்லை. ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு, கத்தோலிக்க திரு அவையின் போதனைகள், வழிபாட்டு முறைமைகள், திருப்பலி பற்றிய விளக்கங்கள் போன்ற பல்வேறு தலைப்புக்களில் 13 நூல்களையும், 20க்கு மேற்பட்ட துண்டுப் பிரசுரங்களையும், 15க்கு மேற்பட்ட தர்க்கப்பிரசங்க பிரசுரங்களையும் வெளியிட்டார். கத்தோலிக்க மக்களுக்கும் குருமாருக்கும் நன்மை பயக்கக்கூடிய வகையில் வருடத்தின் சகல ஞாயிற்றுக் கிழமைகள், பரிசுத்தவாரம், பிரதான திருநாள்களை உள்ளடக்கியதான திவ்விய திருப்பலிப் புத்தகத்தை இலத்தீன் மொழியில் இருந்து தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

இதனுடைய சிறப்பம்சம் யாதெனில், இலத்தீன் மொழியை எவ்வாறு உச்சரிப்பது என்பது பற்றி ஒருபுறம் அதற்கு நேரெதிரே தமிழ் பதங்களைக் கொண்டதாக இப்புத்தகம் அமைந்திருந்தது. இலத்தீன் மொழி கத்தோலிக்க திரு அவையின் அதிகாரபூர்வ மொழியாகவும், வழிபாட்டு மொழியாகவும் அமைந்திருந்த காலத்தில், இவருடைய இந்தப் புத்தகம் தமிழ் பேசும் கத்தோலிக்கருக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கும். மேலும், ‘செக மீட்பர் திருமான்மியம்’ என்ற ஆண்டவர் இயேசுவின் சரித்திரத்தை 03 பாகங்களாக வெளியிட்டார்.

சமயப் பணியிலும் எழுத்துத் துறையிலும் ‘ஒப்பாரும் மிக்காருமற்றுத் திகழ்ந்த’ இவருடைய பணிகளைப் பாராட்டி ஜேர்மன் அரசு 1939லும், இலங்கை அரசு 1981லும் முத்திரை வெளியிட்டு கௌரவித்தது. இவை, இவருடைய ஒப்புயர்வற்ற பணிவாழ்வின் சாட்சியங்களாக அமைகின்றன.

**அருட்தந்தை A.J.B. அன்ரோனைனஸ், அமதி**

அருட்தந்தை A.J.B. அன்ரோனைனஸ், அமதி அவர்கள் 1905.09.03 அன்று யாழ்ப்பாணம், குருநகரில் பிறந்தார். தமது ஆரம்பக் கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியில் கற்று, புனித மாட்டீனார் குருமடத்தில் இணைந்து, 1931ல் தமது நித்திய வாக்குறுதியை மேற்கொண்டு 1932.12.27 அன்று குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட பின்னர், பங்குத்தந்தையாக மன்னார், கரவெட்டி, அனுராதபுரம் ஆகிய இடங்களிலும், புனித சவேரியார் கல்லூரி, கரவெட்டி புனித திருஇருதயநாதர் கல்லூரி, அனுராதபுரம் புனித வளனார் கல்லூரி, மற்றும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி ஆகியவற்றின்

அதிபராகவும் பணியாற்றினார். மேலும், இவர் பணியாற்றச் சென்ற இடங்களிலெல்லாம் தாழ்த்தப்பட்ட, ஒதுக்கப்பட்ட மற்றும் ஏழை மக்களுக்காகத் தமது வாழ்வை அர்ப்பணித்துப் பணியாற்றிய ஒரு குருவாக அறியப்படுகின்றார். இவர் 1973.12.22 அன்று இறைவனடி சேர்ந்தார்.

### மடுத்திருப்பதி வரலாற்றை எழுதியவர்

A.J.B. அன்ரோனைனஸ், அமதி அவர்கள் வரலாற்றுத் துறையிலே ஆர்வம் கொண்டவராக இருந்தமையினால் மன்னார் வேத சாட்சிகள் மற்றும் மடு அன்னையின் வரலாற்றினையும் (The Chronicle of the Sanctuary of Our Lady of Madhu, 1956) தொகுத்து எழுதியுள்ளார். மடு அன்னையைப் பற்றிய இவரது வரலாற்று நூலே, இன்று மடு அன்னையின் வரலாற்றினை அறிய உதவும் ஒரு முக்கிய நூலாக இருக்கின்றது. மேலும், பல ஆய்வுக் கட்டுரைகளையும் இவர் வெளியிட்டுள்ளார்.

### சுவாமி ம. பாவிலுப்பிள்ளை, அமதி

அருட்தந்தை மரியாம்பிள்ளை பாவிலுப்பிள்ளை அமதி, சில்லாலையில் 1921.10.19 அன்று செபஸ்தியாம்பிள்ளை மரியாம்பிள்ளை மற்றும் சூசைப்பிள்ளை மார்செலா தம்பதியினரின் புதல்வனாகப் பிறந்தார். இவர் தமது கல்வியை சில்லாலை றோ. க. த. க. பாடசாலையிலும், மாதகல் புனித வளனார் பாடசாலையிலும், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார். இவர், அமலமரித்தியாகிகள் சபையின் குருவாக உரோமையில் 1952.07.06ல் திருநிலைப்படுத்தப்பட்டார். மெய்யியல் துறையில் சிறப்புப் பாண்டித்தியம் பெற்றவராக (L.Ph in Gregorian University, Rome) இலங்கை 1953ல் வந்தடைந்தார்.

குருத்துவப் பணிகளை இளவாலை பங்கில் தொடங்கி, புதுக்குடியிருப்பு, முத்தரிப்புத்துறை, முருங்கன், வசாவிளான், பாசையூர் போன்ற இடங்களில் தமது பணியை ஆற்றிய இவர், யாழ். புனித சவேரியார் உயர் குருமடத்தில் விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார். இவர் எல்லோராலும் அறியப்பட்ட ஒரு வரலாற்றாசிரியராகவும், கல்வியியலாளராகவும் திகழ்ந்திருக்கின்றார். இவர் 2009.09.08ல் இறைபதமடைந்தார்.

**தமிழ் கத்தோலிக்க பாரம்பரியங்களின் காப்பாளர்**

சமயப்பணி மற்றும் கல்விப்பணிகளை செவ்வனே ஆற்றியிருந்தாலும் தமது எழுத்தின் ஊடாகவும் நற்செய்திப்பணி ஆற்றியிருக்கிறார். 1979-1980களில் 'திருக்குறளும் விவிலியமும்' என்ற நூலை 02 பாகங்களாக வெளியிட்டுள்ளார். 1980ம் ஆண்டு "ஜோசவ் வாஸ் முனிவரின் சரிதை" என்ற நூலை எழுதி, வெளியிட்டுள்ளார். 1980ல் 'சில்லாலை ஆலயத்து அருட்பாக்கள்' என்ற நூலை வெளியிட்டுள்ளார். இந்த நூலின் சிறப்பம்சம் யாதெனில், ஏற்கனவே சில்லாலை கத்தோலிக்க மக்களிடையே புழக்கத்திலிருந்த பக்திப் பாடல்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். அந்நூலின் முன்னுரையில் இவ்வாறு கூறுகின்றார்: "நம் முன்னோர்கள் தேடிவைத்த கலைச் சொத்துக்களைக் காப்பாற்றி பயனடைவது நம் கடமையாகும். நம் அறியாமையால் அழிய விட்டுவிட்டால் அவற்றை மீண்டும் பெறமுடியாது". இதிலிருந்து மக்களின் பாரம்பரியங்களும் கலைகளும் அழியவிடாமல் இவர் பாதுகாத்திருக்கிறார்.

நமது வரலாறுகள் அழியவிடாமல் மற்றைய சந்ததியினருக்குக் கடத்தவேண்டும் என்ற எண்ணத்தோடு, அவருடைய காலத்தில் மூத்த குருவாக இருந்த சுவாமி ஞானப்பிரகாசருடன் இணைந்து 'யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க திருச்சபையின் சரித்திர சுருக்கம்' என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளார். இவ்வாறு, சுவாமி பாவிலுப்பிள்ளை அவர்கள் மறைமாவட்டத்துக்கும், யாழ். அமலமரித்தியாகிகளுக்கும் தாம் தேடி வைத்த கலை மற்றும் பாரம்பரிய வரலாற்றுச் சொத்துக்களில் தொடர்ந்தும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

**அருட்பணி. அதிரியான் ஜோசேப், அமதி**

அருட்தந்தை அதிரியான் ஜோசேப், அமதி, ஜனவரி மாதம் 09ம் திகதி 1924ல் யாழ்ப்பாணத்தில் உள்ள அச்சுவேலியில் பெனடிக்ட் பஸ்தியாம்பிள்ளை யோசேப்பு மற்றும் மார்க்ரெட் நேசரத்தினம் ஆகியோருக்கு மூத்த மகனாகப் பிறந்தார். அவருடைய தந்தையினுடைய தொழில் காரணமாக அதிரியான் யோசேப் தனது கல்வியைப் பல பாடசாலைகளில் பயின்றார். முதலில் இரத்தினபுரியிலும் பின்னர் மட்டக்களப்பு, புனித மிக்கேல் கல்லூரியிலும், அதன்பின் மொரட்டுவ, புனித செபஸ்ரியன் கல்லூரியிலும், இறுதியாக யாழ். புனித பத்திரிசியார்

கல்லூரியிலும் பயின்றார். புனித பத்திரிசியார் கல்லூரியில் பயின்றபோது, தன் மாமன் சுவாமி ஞானப்பிரகாசரைப் போலவே, அமலமரித்தியாகிகளின் மறைப் பணியாளர் சபையில் சேரத் தீர்மானித்தார்.

யாழ். புனித மரியன்னைப் பேராலயத்தில், யாழ். ஆயர் மேதகு ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை, அமதி அவர்களால் 1951.08.06ம் நாள் அமலமரியின் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அருட்தந்தை அவர்கள் இலத்தீன், ஆங்கிலம், தமிழ், ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவராக இருந்ததுடன், எபிரேயம், கிரேக்கம், சிங்களம், ஐரோப்பிய மொழிகள் மற்றும் தென்னிந்திய மொழிகளையும் அறிந்திருந்தார். சங்கீதத்தையும் நன்கு கற்றறிந்து இசையமைக்கவும், இசைக் கருவிகளை மீட்டவும் பழகிக்கொண்டார்.

கொழும்பு மற்றும் நீர்கொழும்பு ஆகிய இடங்களில் பங்குதந்தையாகவும் நுகேகொட, கொழும்புத்துறை அமலமரித் தியாகிகள் சிறிய குருமட அதிபராகவும், புனித சவேரியார் உயர் குருத்துவ கல்லூரியின் திருவிவிலிய விரிவுரையாளராகவும் உருவாக்குனராகவும் பணியாற்றியிருக்கின்றார்.

**அகராதிப் பணியில் அடிகளார்**

புனித சவேரியார் குருமடத்தில் வாழ்ந்தபோது தூய பவுல் மற்றும் பேதுரு எழுதிய திருமுகங்களுக்கான விளக்கவுரைகளை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார். விவிலியத்தில் குறிப்பிட்ட திருப்பாடல்களை தேர்ந்தெடுத்து அவற்றை பாடல்களாக இயற்றி, இராகங்களை அமைத்து ஒலிப்பதிவு செய்து, அப்பாடல்களை ‘யாவேக்கு யாழ் பண்ணிசைப்போம்’ எனும் பெயரில் வெளியிட்டார்.

1995ம் ஆண்டளவில் Lexicon, Glosary ஆங்கில தமிழ் மொழிபெயர்ப்பு அகராதியை எழுதினார். இவ் அகராதியில் பிறமொழி கருத்துக்களையும், தத்துவ மற்றும் இறையியல் பதங்களையும் சேர்த்திருந்தார். மேலும், விவிலியத்தில் உள்ள ஒவ்வொரு புத்தகங்களுக்குமான விளக்கங்களை எழுதி வெளியிட்டார். இவ்வாறு, கற்றலினூடாகவும், அனுபவத்தினூ டாகவும் தாம் பெற்ற அறிவைப் புத்தகங்கள் பாடல்களினூடாக அடுத்தடுத்த தலைமுறையினரோடு பகிர்ந்திருக்கிறார்.

**அருட்பணி. ச. ஜோசப் பிரான்சிஸ், அமதி**

அருட்பணி. சந்தியாப்பிள்ளை ஜோசப் பிரான்சிஸ் அமதி அவர்கள் நீக்கொலாப்பிள்ளை சந்தியாப்பிள்ளை ஜோசப் என்பவருக்கும் அல்வின் யோகம்மா ஆகியோருக்கும் மகனாக 1933.09.24 அன்று மாதகலில் பிறந்தார். தமது கல்வியை மாதகல் புனித தோமையார் பாடசாலை, மாதகல் புனித வளனார் பாடசாலை, புனித ஹென்றியரசர் கல்லூரி, புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றில் பயின்றார். 1956ல் தமது நித்திய அர்ப்பணத்தை அமலமரித்தியாகிகள் சபையில் மேற்கொண்டு, 1959.06.13 அன்று குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

யாழ். மரியன்னை பேராலயத்தில் உதவிப் பங்குத் தந்தையாகவும், தலைமன்னார், சேந்தாங்குளம், கரவெட்டி, மானிப்பாய், விடத்தல்தீவு, பண்டத்தரிப்பு, ஊர்காவற்துறை, அச்சுவேலி, குருநகர், மண்டைதீவு ஆகிய இடங்களில் பங்குத் தந்தையாகவும் பணியாற்றியிருக்கின்றார்.

**இறைவனின் அன்பைச் சுவைக்க அழைக்கும் எழுத்தாளர்**

பங்குத்தந்தையாக பல இடங்களில் ச. ஜோசப் பிரான்சிஸ் அடிகள் பணியாற்றியிருந்தாலும், எழுத்துத் துறையிலும் தமது பங்களிப்பைச் செய்துள்ளார். இறைவனுடைய ஆழமான, நிலையான, இரக்கம் நிறைந்த அன்பைச் சுவைத்த இவர், மற்றவர்களும் இறைவனின் அன்பைக் கண்டு அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கோடு அதைக் கண்டடையும் வழியை எழுதிவைத்துச் சென்றுள்ளார். திருவிவிலியத்தில் உள்ள திருப்பாடல்களின் மூலம் வெளிப்படுத்தப்படும் கடவுளின் அன்பை அனைவரும் அனுபவிக்க வேண்டும் என்பதற்காக, 'ஆண்டவர் நல்லவர் சுவைத்துப்பார்' என்ற 05 பாகங்கள் கொண்ட நூலை வெளிக்கொணர்ந்தார். 150 திருப்பாடல்களையும் முப்பது, முப்பது திருப்பாடல்களாகப் பிரித்து அவற்றினை விளக்கியுள்ளார். திருப்பாடல்களைப் பொருளுணர்ந்து செபிக்க விரும்பும் அனைவருக்கும் இவருடைய இந்நூல் ஒரு வரப்பிரசாதமாகும்.

**அருட்பணி. பிலிப்ஸ் இம்மானுவேல் இயேசுதாசன், அமதி**

அருட்பணி. பிலிப்ஸ் இம்மானுவேல் இயேசுதாசன், அமதி, யாழ். மறைமாவட்டத்தின் பருத்தித்துறைப் பங்கைச் சேர்ந்த புலோலி என்ற கிராமத்தில் 1940ம் ஆண்டில் அந்தோனிப்பிள்ளை பிலிப்ஸ் மற்றும் பிரான்சிஸ்கா தம்பதியினருக்கு மகனாகப்

பிறந்தார். தமது கல்வியை புலோலி றோமன் கத்தோலிக்க பாடசாலை, கரவெட்டி திரு இருதயக் கல்லூரி ஆகியவற்றில் பயின்றார். உயர் கல்வியை கொகுவல புனித சூசையப்பர் குருமடத்தில் மேற்கொண்டார். 1958ல் அமலமரித்தியாகிகள் சபையில் இணைந்து துறவற வாழ்வை மேற்கொண்ட இவர், 1964இல் இறைவனின் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

திரு விவிலியத்தில் சிறப்புப் பாண்டித்தியம் பெற்றிருந்த இவர், தனது குருத்துவ பணிவாழ்வில் பதினெட்டு ஆண்டுகள் தியான போதகராகப் பணி புரிந்திருக்கின்றார். நாட்டின் பல்வேறு பாகங்களிலுமுள்ள தமிழ்ப் பங்குகளில் மறையுரை ஆற்றியிருக்கிறார். தொடர்ந்து இருபது ஆண்டுகளுக்கு மேலாக அமலமரித்தியாகிகளின் குருமாணவர்களின் உருவாக்கத்திற்கென தம்மை அர்ப்பணித்து, அரும்பணி ஆற்றினார். ஊர்காவற்துறை உதவி பங்குத்தந்தையாகவும், மட்டக்களப்பு துணைப் பேராலயத்தின் துணை பங்குத்தந்தையாகவும், கொழும்புத்துறை சிறிய குருமட அதிபராகவும், கண்டி, அம்பிட்டியாவிலுள்ள தேசிய குருமடத்திலும், யாழ்ப்பாணம், கொழும்புத்துறை புனித பிரான்சிஸ்கு சவேரியார் உயர் குருமடத்திலும் வேதாகம விரிவுரையாளராகப் பத்து ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றியிருக்கிறார். மேலும், மன்னார் ஞானோதயம் ஆரம்ப நவசன்நியாச மடத்தின் அதிபராகவும் பணியாறியுள்ளார்.

**முன்சென்ற அமதிகளை மறவாத பண்பாளன்**

அருட்பணி இம்மானுவேல் இயேசுதாசன், அமதி 15 தமிழ் நூல்களையும் 06 பாகங்களைக் கொண்ட *Our Tribute* எனும் நூலையும் எழுதியுள்ளார். இவரின் நூல்கள், கத்தோலிக்க திருமறையின் விளக்கங்களாகவும், திருவிவிலிய அறிவை ஊட்டுவனவாகவும், கத்தோலிக்க திரு அவையினுடைய வழிபாட்டு முறைகளைப் பற்றிய விளக்கங்களாகவும் அமைந்திருக்கின்றன.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக க.பொ.த உயர் தர மாணவர்களுக்குரிய கிறிஸ்தவ நெறியில் ஈடுபாடு கொண்ட அடிகளார், காலத்துக்குக் காலம் மாறுபடும் பாடத்திட்டத்திற்கு அமைய, அவர்களுக்குரிய பாடநூல்களையும் தயாரித்து வெளியிட்டு வந்தார்.

இதே வரிசையில்தான் 2009 மற்றும் 2010ம் ஆண்டுகளில் இலங்கைக் கல்வி அமைச்சினால் அறிமுகம் செய்யப்பட்டிருந்த

புதிய க.பொ.த. உயர்தர மாணவர்களுக்குரிய கிறிஸ்தவ நாகரிக பாடத்திட்டத்துக்கு அமைய 4 புத்தகங்களை ஒரே ஆண்டில் வெளியிட்டார். கல்வி அமைச்சினால் புதிய பாடத்திட்டம் வெளியிடப்பட்டிருந்தது. ஆனால், மாணவர்களுக்கென எந்த விதமான புத்தகங்களும் இருக்கவில்லை. அந்த வகையில் 'விதையொன்று வளர்கின்றது' (770 பக்கங்கள்), 'புளிப்பு மாவு' (700 பக்கங்கள்), 'மனுவார்த்தையில் இறைவார்த்தை' (600 பக்கங்கள்) 'கடுகு மரம்' (485 பக்கங்கள்) போன்ற மாணவர்களுக்குரிய பாடப் புத்தகங்களை வெளியிட்டார். இங்கு ஆச்சரியம் நிறைந்த ஒரு விடயம் என்னவென்றால், அதிக பக்கங்களைக் கொண்ட புத்தகங்கள் அனைத்தும், ஒரே ஆண்டில் வெளிவந்ததேயாகும்.

இவருடைய இன்னுமொரு தனித்துவமான, சிறப்புமிக்க படைப்பாக *Our Tribute* எனும் 06 ஆங்கில மொழிப் புத்தகங்கள் விளங்குகின்றன. இதிலே ஆரம்ப காலத்தில் இலங்கைக்கு வந்து பணி செய்த அமலமரித்தியாகிகள் தொடக்கம் 2010 வரையான காலப்பகுதி வரையும் பணிசெய்து, இறைபதமடைந்த அமலமரித்தியாகிகளின் வாழ்க்கை வரலாற்றை மிகச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார்.

**அருட்பணி தீ. பற்றிக் ஞானப்பிரகாசம், அமதி**

அருட்பணி. பற்றிக் ஞானப்பிரகாசம், அமதி யாழ்ப்பாணம் நெடுந்தீவில் தியோகு பற்றிக் மற்றும் சுவக்கீன் சவினம் ஆகியோரின் மகனாக 1945.10.16ம் திகதி பிறந்தார். தமது கல்வியை புனித யோவான் றோமன் கத்தோலிக்கத் தமிழ்ப் பாடசாலை, கொழும்பு, கொட்டாஞ்சேனை புனித பெனடிக்ற் கல்லூரி ஆகியவற்றில் மேற்கொண்டார். 1961ம் ஆண்டு கொகுவலவில் அமைந்துள்ள அமலமரித்தியாகிகளின் சிறிய குருமடத்தில் இணைந்து 1969.06.13ல் நித்திய அர்ப்பணத்தை மேற்கொண்டு, 1972.04.26ல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட பின்னர், அனுராதபுரம் மற்றும் நீர்கொழும்பு ஆகிய இடங்களில் உதவிப் பங்குத் தந்தையாகவும், புதுக்குடியிருப்பு, முல்லைதீவு, வலைப்பாடு, இரணைதீவு, நாவாந்துறை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் பங்குத்தந்தையாகவும், மேலும் மறையுரைஞராக இலங்கையின் பல இடங்களில் மறையுரை ஆற்றிப் பணிசெய்துள்ளார். மேலும், பெங்களுரில் உள்ள தர்மாரம் கல்லூரி, ஜெருசலேம், மற்றும்

மனிலா ஆகிய இடங்களில் தமது விவிலிய மேற்படிப்பை மேற்கொண்டார்.

### கருத்தாளம் மிக்க எழுத்தாளர்

கருத்தாளம் மிக்க, சிறந்த ஒரு சிந்தனையாளன், எழுத்தாளன், மறையுரைஞர். தான்பெற்ற விவிலிய அறிவை மற்றவர்களோடு பகிர ஆவல்கொண்டு ஆழ்கடலின் முத்துக்கள், அமைதித் துளி, சிந்தனைத் திரட்டு, இறைஞான ஈர்ப்புக்கள் எனும் 04 நூல்களை எழுதியுள்ளார். பாதுகாவலன் பத்திரிகையில், 'மண்ணும் மன்னனும் மதமும்' என்ற தொடரை இறையியல், சமூகவியல், வரலாற்றியல் சார்ந்த கட்டுரையாக எழுதியுள்ளார். இறைஞான ஈர்ப்புகள் என்ற பற்றிக் அடிகளாரின் நூல் அவரது மறையுரைகளின் ஒரு சிறுதொகுப்பு எனலாம்.

### டே. வின்சன் பற்றிக், அமதி: மாற்றத்திற்கான எழுத்தாளர்

வி.பி. என அறியப்பட்ட டேவிட் வின்சன் பற்றிக் அமதி, தாம் எழுதிய 30 நூல்களில், 05 நூல்களை ஆங்கில மொழியில் எழுதியுள்ளார். இவருடைய பணிகளைப் போலவே, இவர் எழுதிய நூல்களும் பல்வேறுபட்ட துறைகளைச் சார்ந்ததாக அமைந்துள்ளன. அவ்வகையில் இவர் உளவியல், இறையியல் மற்றும் மெய்யியல், மானிடவியல், வரலாறு போன்ற துறைகளில் நூல்களைப் படைத்துள்ளார். மேலும் இவரே 'நான்' உளவியல் சஞ்சிகையைத் தொடங்கியவர். அதனுடைய வளர்ச்சிக்கு தொடர்ந்து பங்காற்றி வருவதோடு 'அன்புமயம்' என்ற சர்வமத சஞ்சிகையை ஆரம்பித்துத் தொடர்ந்து இயக்கி வருகின்றார்.

இவருடைய எழுத்துப் பணிகளுக்காக 'கலாபூசணம்' எனும் இலங்கை அரசின் தேசிய விருதையும், யாழ்ப்பாண மாவட்ட யாழ். ரத்னா விருதினையும் பெற்றுக்கொண்டார். மேலும் இவர் பிரபல கத்தோலிக்க ஆன்மிக எழுத்தாளரான Henri Nouwen வெளியிட்ட The Inner Voice of Love எனும் ஆங்கில நூலைத் தமிழில் மொழிபெயர்த்து 'அன்பின் உட்குரல்' எனும் தலைப்பில் வெளியிட்டார். இந்த நூலுக்கு சிறந்த மொழிபெயர்ப்புக்கான மாகாண விருதினையும் பெற்றுக்கொண்டார். தமது எழுத்தாலும் வாழ்வாலும் தனிமனித, சமூக மாற்றத்துக்கான தனது பங்களிப்பைத் தொடர்ந்தும் செய்து வருகின்றார். யாழ். பல்கலைக்கழகத்தில் மானுடவியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவராவார்.

**சா. ம. செல்வரட்ணம், அமதி: முழுமைதேடிப் பயணிக்க அழைப்பு**

மறையுரைஞர், மாநாடுகளின் நெறிப்படுத்துனர், வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர், தியானங்களை வழிப்படுத்துபவர், உள ஆற்றுப்படுத்துனர், விரிவுரையாளர் போன்ற பணிகளைப் புரிந்து, எழுத்துத் துறையிலும் தமது பணியை ஆற்றியிருக்கின்றார் அருட்பணி. சா. ம. செல்வரட்ணம், அமதி. உயர் குருமட மாணவராக இருக்கும் போதே எழுத்துப்பணியை ஆரம்பித்தார். இவர் 'கரவையூர்ச் செல்வம்' என தமிழ்பேசும் உலகில் அறியப்பட்ட பேச்சாளர், எழுத்தாளர். துறவறம், ஆன்மிகம் மற்றும் உருவாக்கம் போன்ற துறைகளில் 12 நூல்களை எழுதியுள்ளார். இவற்றில் ஒரு புத்தகம் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட புத்தகமாகும். மேலும் செய்தித் தாள்களில் தமிழில் பல கட்டுரைகளையும், 05இற்கும் மேற்பட்ட ஆங்கில கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவருடைய எழுத்துப்பணி இன்றும் தொடர்கின்றது.

இவருடைய படைப்புகளில் மிக முக்கியமான ஒரு படைப்பாக இருப்பது 'புரட்சியில் பூத்த பூ' எனும் நூலாகும். அமலமரித்தியாகிகளின் நிறுவுனரான புனித இயூஜின் டி மசனட் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை உரைநடைக் காவியமாக வடித்துத் தந்துள்ளார். மேலும் இவர், கடந்த இரு ஆண்டுகளில் வெளியிட்ட 'மாறிய எனது பாதை மாற்றியவர் யாரோ', மற்றும் 'உறவுகள்' ஆகிய நூல்கள், இவரது முதிர்ந்த அனுபவத்தின் படைப்புக்களாக முக்கியத்துவம் பெறுகின்றன. ஒரு தேடுநராக வாழ்ந்துவரும் இவர், ஒவ்வொருவரும் அவரவர் பாதையில் பயணித்து முழுமையில் நிறைவடைய வேண்டும் என்பதே இந்நூல்களின் ஊடாக இவர் கூறும் செய்தியாகும். உளவியல் கற்கைகளில் முனைவர் பட்டத்தை அமெரிக்காவின் பொஸ்ரன் பல்கலைக்கழகத்தில் பெற்றவர் ஆவார்.

**செ. அன்புராசா, அமதி: புத்தாக்கத் திறன்மிக்க எழுத்தாளர்**

செ. அன்புராசா, அமதி கடந்த 25 ஆண்டுகளாக மறைப்பணியிலும், சமூகத் தொண்டுகளிலும், கலை இலக்கியப் பணிகளிலும் மிகுந்த ஆர்வத்துடன் இயங்கி வருபவர். இளம் பராயத்திலிருந்து இலக்கிய ஈடுபாட்டுடன் வாழ்ந்துவரும் இவர், மன்னா, பாதுகாவலன், நான், ஞானம், தாயக ஒலி, ஜீவநதி போன்ற பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் எழுதி வருகிறார். இவருடைய எழுத்துக்கள் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துபவையாக

அமைந்திருகின்றன. சமூக வலைத் தளங்களிலும் தொடர்ச்சியாக செயலூக்கம் மிக்க ஆக்கங்களைப் படைத்து வருகிறார்.

இவர் மொத்தமாக 25 நூல்களை இதுவரை எழுதியுள்ளார். கட்டுரை, கவிதை, விமர்சனம் மற்றும் சிறுவர் இலக்கியம் போன்ற இலக்கிய வடிவங்களில் எழுதிவருபவர். இவருடைய எழுத்துப்பணி எவ்வளவு தூரம் சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி, அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறது என்றால்; இவருடைய ஆக்கங்கள் பல மாகாண, தேசிய விருதுகளைப் பெற்றுள்ளன. குறிப்பாக, 02 நூல்களுக்குத் தேசிய 'சாகித்ய விருதையும்', 04 நூல்களுக்கு மாகாண ரீதியில் சிறந்த நூல்களுக்கான விருதினையும் பெற்றுள்ளார். 2023இல் வெளியிடப்பட்ட இவரது 'அன்புள்ள ஆரியசிங்க' என்ற நூல், ஈழத் தமிழர்களுக்கு எதிரான அரசின் ஒடுக்குமுறையினைக் கோடிட்டுக் காட்டுவதோடு அவர்தம் அபிலாசைகளையும் எடுத்துரைக்கிறது. அதேவேளை, இனமத நல்லிணக்கத்தைச் சுட்டிக்காட்டி, அரசியல் தீர்வு குறித்தும் இந் நூல் உரையாடுகிறது. உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் இந்த நூல் கவனத்தைப் பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது. இந்நூல் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் 'அன்புள்ள ஆரியசிங்க' — *Dear Ariyasinghe* — 'கிதுவத் ஆரியசிங்கவெத்த' ஆகிய பெயர்களில் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

**ஜேக்கப் ரமேஸ், அமதி: மாணவர் வழிகாட்டி நூல்களை எழுதுபவர்**

கிறிஸ்தவ மாணவர்களுக்கு கல்வியையும் மறையறிவையும் ஊட்டும் விதமாகக் கிறிஸ்தவ நாகரிகம் பழைய புதிய பாடத் திட்டங்களுக்கான பாட நூல்களையும், கிறிஸ்தவ நாகரிகப் பரீட்சை வழிகாட்டி, க.பொ.த. சாதாரண தரம் பரீட்சை வழிகாட்டி போன்ற நூல்களை ஜேக்கப் ரமேஸ், அமதி வெளியிட்டுள்ளார். மேலும் மாணவர்களுக்கு ஆங்கில அறிவை எளிய முறையில் கற்பிக்கும் முகமாக ஆங்கில இலக்கண நூல் (English Grammer Book) ஒன்றையும் வெளியிட்டுள்ளார். 'சிலுவையின் நிழல்', 'தவக்காலச் சிந்தனை' மற்றும் 'புனித கப்பலேந்தி மாதா வரலாறும் செபக்கொத்தும்' ஆகிய நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

மேலும், கிறிஸ்தவம் சார்ந்த 180 கட்டுரைகளையும், சமூக விடயங்கள் தொடர்பாக 32 கட்டுரைகளையும், மேலும் 03 ஆய்வுக் கட்டுரைகளையும், மன்னா, பாதுகாவலன், ஞானஒளி போன்ற கத்தோலிக்க பத்திரிகைகளிலும் தினக்குரல், உதயன்,

வலம்புரி ஆகிய தமிழ் பத்திரிகைகளிலும் எழுதியுள்ளார். இவரது சமூகப் பணிகளைப் பாராட்டி ‘தேசபந்து’ எனும் அரச தேசிய விருதினையும் பெற்றுள்ளார். வணிக மேலாண்மை கற்கைகளில் இவர் முனைவர் பட்டம் பெற்றவராக இருக்கிறார்.

**ஸ்ரனி அன்ரனி, அமதி: இறையியல் கருத்தாளம் மிக்க எழுத்தாளர்**

பங்குத்தந்தையாக, மறையுரைஞராக, விரிவுரையாளராக, ஞான ஒடுக்க வழிநடத்துனராகப் பணிகளை ஆற்றிய ஸ்ரனி அந்தோனிப்பிள்ளை, அமதி, 2016ம் ஆண்டு இரக்கத்தின் யூபிலி ஆண்டு கொண்டாடப்பட்டபோது ‘இரக்கத்தின் வேர்கள்’ எனும் நுலை வெளியிட்டார். ‘கொல்கொத்தா முதல் கொரோனாவரை’ மற்றும் ‘சிலுவையின் சிறகுகளாகிட' எனும் இரண்டு சிறிய புத்தகங்களை, சிலுவைப் பாதைச் சிந்தனைகள் கொண்டதாக மக்களுடைய வழிபாட்டிற்கு ஏற்றாற்போல வெளியிட்டார். மேலும், தவக்காலச் சிந்தனைகளை உள்ளடக்கிய ‘பினிக்ஸ் பறவைபோல எழுவோம்’ எனும் நூலையும் வெளியிட்டார். மேலும் ‘மனக்கிறுக்கல்', ‘சுகமான வலிகள்’, (புதுக்கவிதை), ‘கூட்டொருங்கியக்க திரு அவை’ மற்றும் ‘புனித ஜோசப் வாஸ்’ போன்ற நூல்களையும் வெளியிட்டுள்ளார். மேலும் பாதுகாவலன் பத்திரிகையிலும் தமது கட்டுரைகளை எழுதிவருகிறார்.

**செல்வ விஜேந்திரன், அமதி: உளவலுவூட்டும் எழுத்தாளர்**

மறைப் பணிகளோடு சேர்த்து உள ஆற்றுப்படுத்தல், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் போன்ற செயற்பாடுகளைச் செய்து, உள ஆற்றுப்படுத்தல் வழிமுறைகளும், வழிகாட்டல்களும் அனைத்து மக்களையும் சென்றடைய வேண்டுமென்ற நோக்கோடு எழுத்துப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றார் செல்வ விஜேந்திரன், அமதி. அந்த வகையில் ‘மனப்பதிவுடன்’ எனும் உளவியல் கட்டுரைகள் அடங்கிய நூலை 2020லும், ‘நரம்பு மொழியியல் நிகழ்வு உளவளச் சிகிச்சை’ எனும் நூலையும் வெளியிட்டுள்ளார். மேலும், உளவலுவூட்டல் செயற்பாட்டாளர்களுக்கு பயன்படும் வகையிலும், உளவலுவூட்டல் செயற்பாடுகளை மகிழ்ச்சியான முறையில் முன்னெடுத்துச் செல்லும் முகமாகவும் ‘உள்ளே நூறு உளம் மகிழ விளையாட்டுக்கள்’ என்ற நூலையும் வெளியிட்டுள்ளார்.

### ஜேம்ஸ் சுரேந்திரராஜா, அமதி: வழிபாட்டை வாழ்வாக்க எழுதுபவர்

இவர், பாதுகாவலன், திருமலைத்தீபம் எனும் கத்தோலிக்க பத்திரிகைகளில் எழுதியுள்ளார். 'சிலுவையின் வழியில்' என்ற தலைப்போடு தவக்கால சிந்தனைகள் அடங்கிய 02 புத்தகங்களை வெளியிட்டுள்ளார். அமலமரித்தியாகிகளின் வழிபாட்டுச் சடங்கு நூலினை 2020ம் ஆண்டு தமிழில் மொழிபெயர்த்தார். 2021ம் ஆண்டு *The Act of Oblation* எனும் பெயரில் ஆங்கில நூலை வெளியிட்டார். மேலும், 'வழிபாடு வாழ்வாகுமா' எனும் நூலை 2024ல் வெளியிட்டார். வழிபாடு, வாழ்வோடு இணைந்து, வாழப்பட வழிகாட்டும் நூலாக இந்நூல் அமைந்திருக்கின்றது. மேலும், 'வழிபடுவோம்' எனும் இணையதள பக்கத்தினூடாக (vazhipaduvom.blogspot.com) கத்தோலிக்க திரு அவையின் திருவழிபாட்டுக்கான வழிகாட்டல்களையும், குறிப்பாக ஞாயிறு வழிபாடுகள், திரு அவையின் பெருவிழாக்கள் என்பனவற்றுக்கான வழிபாட்டு முழுமையையும் 2019.12.22 தொடக்கம் தமிழில் எழுதி வருகின்றார்.

### பெனடிக்ற் இயூஜின், அமதி: 'நீரோடை நேசகர்'

பங்குத் தந்தையாக, மறையுரைஞராக, பத்திரிகை ஆசிரியராக, மாகாண முதல்வராகப் பணிகளை பெனடிக்ற் இயூஜின், அமதி ஆற்றியிருக்கிறார். பதுளை மறைமாவட்டத்தில் பணியாற்றிய போது, நீரோடை எனும் தமிழ்க் கத்தோலிக்க மாதாந்த பத்திரிகையைத் தொடக்கி, அதன் பதிப்பாசிரியராகப் 14 ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறார். 14 ஆண்டுகள் பதிப்பாசிரியராகப் பத்திரிகையில் பகிர்ந்துகொண்ட தமது சிந்தனைகளைத் தொகுத்து 'புதுவாழ்வியற் சிந்தனைகள்' எனும் பெயரில் வெளியிட்டார்.

மேலும், மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் 'வெட்டாப்பு'ப் பத்திரிகையில் குடும்பம் மற்றும் வழிபாடு சம்பந்தமான கட்டுரைகளையும் எழுதியுள்ளார். மலையகத்தில் இவருடைய பணிகளைப் பாராட்டி ஊவா மாகாணசபையினால் 'திருமறை செம்மல்' எனும் விருதினை 2015லும், 'செம்மொழிக் காவலர்' எனும் விருதினை 2017லும் பெற்றுகொண்டார். மேலும், பதுளை மறைமாவட்டத்தினால் 'அகச்சுடர்' எனும் விருதினையும், 'நீரோடை நேசகர்' எனும் விருதினையும் பெற்றுக்கொண்டார்.

**போ. ஜெயந்தன் பச்சேக், அமதி: அனுபவப் படைப்பாளர்**

விரிவுரையாளராக, உருவாக்குனராக, வைத்தியசாலை, ஆன்மகுருவாக, உயர்கல்வி நிலையங்களின் ஆன்மகுருவாக எனப் பணிகளை மேற்கொண்ட ஜெயந்தன் பச்சேக், அமதி, 'எனது பயணங்களில்' என்ற நூலை 2008ம் ஆண்டு வெளியிட்டார். இந்நூல் இவருடைய பயணங்களில் ஏற்பட்ட சுவாரஸ்யமான அனுபவங்களின் தொகுப்பாக அமைந்திருக்கிறது. இவருடைய 2வது நூலாக 'நறுக்கென்று மூன்று விரல் கேள்விகள்' எனும் நூலையும் எழுதியிருக்கிறார். இவ்விரண்டு நூல்களைத் தவிர மன்னா, பாதுகாவலன் மற்றும் தினக்குரல் ஆகிய பத்திரிகைகளிலும் ஆக்கங்களை எழுதியுள்ளார்.

**ம. போல் நட்சத்திரம், அமதி: முன்னோரின் வரலாற்றை எழுதுபவர்**

அருட்பணி. போல் நட்சத்திரம், அமதி மறையுரைஞராக, பங்குத்தந்தையாக, உருவாக்குனராக, ஞான ஒடுக்க வழிநடத்துனராக, விரிவுரையாளராக, மாகாண முதல்வராகப் பணிபுரிந்தவர். அருட்பணி, பிலிப்ஸ் இயேசுதாசன் அமதி, எம்மண்ணில் பணியாற்றி இறைவனடி சேர்ந்த அமலமரித்தியாகிகளின் வாழ்க்கை வரலாற்றை 06 நூல்களாக வெளியிட்டிருந்தார். அவருடைய மறைவுக்குப் பின்னர், அவர் ஆற்றிய அப்பெரும் பணியை, அருட்பணி. போல் நட்சத்திரம் தொடர்ந்தார். இவரும் 2011 தொடக்கம் 2022 வரை பணிசெய்து இறைபதமடைந்த அமலமரித்தியாகிகளின் வாழ்க்கை வரலாற்றை *Our Tribute* என்ற பெயரிலேயே நூலாக எழுதி வெளியிட்டார். மேலும், இவர் சமயம் மற்றும் சமூகம் சார்பான கட்டுரைகளை மன்னா, பாதுகாவலன் போன்ற பத்திரிகைகளில் எழுதியுள்ளார்.

**செபமாலை துரம், அமதி: அன்னை மரி பற்றி நூல் தந்தவர்**

பங்குத்தந்தையாக, மறையுரைஞராக, ஆன்மிக வழிநடத்துனராகப் பணியாற்றி இருக்கிறார். அன்னை மரியில் மேற்கொண்ட பக்தியின் காரணமாக அன்னை மரியின் பக்தியை மக்களிடையே மேலும் பரப்பும் ஆவலோடு 'மகிழ்ச்சியின் ஊற்று', 'மெஜகோரியிலிருந்து மரியன்னையின் அழைப்பு' என்ற தலைப்புகளில் இரண்டு நூல்களை செபமாலை துரம், அமதி வெளியிட்டுள்ளார். மரியன்னையின் பக்தியை மறை உரைகளால் மட்டுமன்றி, தமது எழுத்துக்களாலும் வளர்த்துள்ளார்.

**சூசை டேமியன், அமதி: உளவளத்துணை நூல் தந்தவர்**

சூசை டேமியன், அமதி மறையுரைஞராக, உருவாக்குனராக, உளவளத்துணையாளராக, விரிவுரையாளராக, ஞான ஒடுக்க வழிநடத்துனராகப் பணிசெய்பவர். உளவியல் துறையில் சிறப்புப் பாண்டித்தியம் பெற்றவராகத் தாம்பெற்ற அறிவை 'உளவளத்துணை' எனும் நூலினூடாக ஏனையோரும் பயன்பெறும் வண்ணம் தமிழில் ஆக்கியுள்ளார். உளவளத்துணையை அறிமுகம் செய்யும் பயிற்சி நூலாக இந்நூல் அமைகின்றது. மேலும், உளவளத்துணை சார்ந்த கட்டுரைகளை 'நான்' எனும் உளவியல் சஞ்சிகையிலும் எழுதி வருகிறார்.

**ஜீவேந்திரா போல், அமதி: சிறந்த மொழிபெயர்ப்பாளர்**

மறையுரைஞராக, பங்குத்தந்தையாக, உருவாக்குனராக, விரிவுரையாளராக, மாகாண முதல்வராக, ஞான ஒடுக்க வழிநடத்துனராகப் பணிபுரிந்தவர் ஜீவேந்திரா போல், அமதி. பெரும்பாலான தமிழ் கத்தோலிக்க மக்களுக்கு, திருத்தந்தையின் உரைகள் மற்றும் அவர் வெளியிடும் மடல்களைத் தமிழ் மொழியில் விளங்கிக் கொள்ளமுடியாத துர்ப்பாக்கிய நிலைமையே பெரிதும் காணப்படுகின்றது. அவ்வகையில் மறைந்த எம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2024இல் எழுதிய Dilexit nos என்ற சுற்று மடலை, அருட்தந்தை அவர்கள் 'அவர் நம்மை அன்பு கூர்ந்தார்' எனும் பெயரில் சுருக்கமாக தமிழில் மொழிபெயர்த்தார். இது திருத்தந்தையின் சுற்றுமடல்களை தமிழில் வாசிக்கவேண்டும் என காத்திருந்தோருக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைகிறது. மேலும், அருட்தந்தை அவர்கள் சமயம் மற்றும் சமூகம் சம்பந்தமாகத் தொடர்ந்தும் பத்திரிகைகளில் எழுதி வருகின்றார்.

**செபஸ்தி நீக்கிலாஸ், அமதி: நன்றி மறவாத எழுத்தாளர்**

மறையுரைஞராகப் பணியாற்றிய செ. நீக்கிலாஸ், அமதி தமது சிறிய குருமட அதிபராகவும், முன்மாதிரியான குருவாகவும் திகழ்ந்த அருட்தந்தை அதிரியான் யோசேப், அமதி அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றிய குறிப்புகளையும், தாம் அவரோடு வாழ்ந்த அனுபவங்களையும் சேர்த்து 'அருட்தந்தை அதிரியான் யோசேப்பு அ.ம.தி' என்னும் சிறிய நூலை ஆக்கி அளித்துள்ளார். இந்நூலானது அருட்தந்தை அதிரியான் யோசேப் அவர்களை பற்றி மேலதிகமான தகவல்களைப் பெற உதவுகிறது.

**சூ. அன்ரனி பொன்சியன், அமதி: நல்லாசியரிய வழிகாட்டி**

ஆசிரியராக, மறையுரைஞராகப் பணியாற்றித் தற்போது பங்குத்தந்தையாகப் பணிபுரிந்து வருகிறார் சூசையப்பு அன்ரனி பொன்சியன், அமதி. ஆசிரிய, அதிபராகப் பணிசெய்த காலத்தில் தம் அனுபவங்களை 'நல்லாசிரியர் - ஆன்மிகமும் ஆளுமையும்' என்ற நூலில் 2020ம் ஆண்டு வெளியிட்டார். தமது ஆசிரியப்பணியின் அனுபவங்களின் ஊடாக ஆசிரியர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய ஆளுமையையும் நற்பண்புகளையும் இந்த நூலில் தெளிவாக விபரிக்கிறார். சிறப்பு இளங்கலைமாணிப் பட்டத்தை பெற்றதோடு, கல்வி சார்ந்த பட்டப் படிப்பை நிறைவு செய்துள்ளார்.

**ச. பிலிப் ரஞ்சனகுமார், அமதி: இளையோரின் எழுத்தாளர்**

மறையுரைஞராக, பங்குத்தந்தையாகப் பணியாற்றிவரும் பிலிப் ரஞ்சனகுமார், அமதி, இளையோரோடும் பணியாற்றி அவர்களுடைய பிரச்சினைகளை இனங்கண்டு அவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்பவர். இளைஞரோடு பணியாற்றிய அனுபவங்களைக் கொண்டு, தாம் பெற்றுக்கொண்ட உளவியல் அறிவின் பிரகாரமும் இன்றைய இளையோரிடம் குறிப்பாக தமிழ்பேசும் இளையோரிடம் மனச்சோர்வு அதிகமாக இருக்கின்றது என அறிந்து, அம்மனச் சோர்வை விலக்கி, மகிழ்வோடும் வாழத் தமது 'இளமையே! மனச்சோர்வை மண்டியிடச்செய்' எனும் நூலின் வழியாக விளக்குகின்றார்.

**அ. ஜேசுராஜ் குரூஸ், அமதி: சமய உரையாடலுக்கான அழைப்பு**

மறையுரைஞராக, உருவாக்குனராகப் பணியாற்றிவரும் யேசுராஜ் குரூஸ், அமதி எழுத்துத் துறையில் 'உறவின் மொழி' எனும் நூலில் ஊடாகக் கால்பதித்திருக்கிறார். இந்த நூலில் ஊடாக சமய சமூக உரையாடலுக்கு வழிகாட்டுகின்றார். தனிமனித, சமூக நல்வாழ்வுக்கான வழிகளை இந்நூலின் ஊடாக எடுத்துரைக்கிறார்.

**முடிவுரை**

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் தொடக்கம் இன்றுவரை 24 சுதேச அமலமரித்தியாகிகள் தம்முடைய ஏனைய பணிகளோடு சேர்த்து எழுத்துத் துறையிலும் பிரகாசிக்கின்றனர். தமிழ், வரலாறு, இறையியல், ஆன்மீகம், உளவியல், மெய்யியல், சமூகவியல்,

மானிடவியல், வரலாறு, இனமத நல்லிணக்கம், நிகழ்கால சம்பவங்களின் பதிவுகள், சமய சமூக விழிப்புணர்வு போன்ற துறைகளிலும் தமது எழுத்தால் தமிழ்ச் சமூகமும், ஆன்மிக ரீதியில் கத்தோலிக்க தமிழ் மக்களும் பயன்பெறும் வகையில் தம்பணிகளை எழுத்தின் ஊடாக ஆற்றிவருகின்றனர் என்பது இக்கட்டுரையின் முடிவில் தெளிவாகிறது.

சமயப் பணிகளில் ஈடுபடுகின்ற அருட்தந்தையர்கள், அதனோடு சேர்த்து தமிழ் வளர்ப்பதும், சமய சமூக விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி, தமிழர் எம் மனத்திலும், சமுதாயத்திலும் மாற்றத்தைக் கொண்டுவர எழுதும் இவர்களின் முயற்சிகள் அனைத்தும் வியந்து போற்றப்படவேண்டியதும், தொடர்ந்து ஊக்குவிக்கப்பட வேண்டியதொரு விடயமுமாகும். அருட்தந்தையர்கள் ஆன்மிக ரீதியாக, உளவியல் ரீதியாக, தனிமனித மற்றும் சமூக ஒழுக்கம் சம்பந்தமாக, தமிழர் எம் வரலாறு சம்பந்தமாக எழுத்தில் வடித்ததை, வடிப்பதை நமது வருங்கால சந்ததியினரிடம், மாணவர்களிடம், மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டியது பங்குத்தந்தையர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் சமய சமூக வழிகாட்டிகள் ஒவ்வொருவருடையவும் கடமையாகும். மேலும், எம் மத்தியில் எழுத்துப் பணியிலே ஈடுபடுகின்ற எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவதோடு, அவர்களுக்கு வேண்டிய ஒத்துழைப்பையும் வழங்குவதும் அவசியமாகும்.

**உசாத்துணை நூல்கள்**

யாழ். அமதிகளின் ஆவண காப்பக ஆவணங்கள்

Philps Jesuthasan, Our Tribute, Oblate Study Club, Ampitiya, 2001…

பேரறிஞர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் முப்பொன்விழா நினைவு மலர், 2025

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் முப்பொன்விழா ஆய்வரங்க கட்டுரைகளின் தொகுப்பு, 2025

நிக்கிலாஸ், அமதி, அருட்தந்தை அதிரியான் யோசேப்பு, 2003.

நேரடியாக அமலமரித் தியாகிகளிடமிருந்து பெற்ற தகவல்கள்

# இரு சபையினருக்கிடையே வளர்ந்து வலுவூட்டிக் கொண்டிருக்கும் உறவு

**அருட்சகோதரி நெவிஸ் லடிஸ்லாஸ்**
திருக்குடும்ப சபை,
யாழ்ப்பாணம்.

இது இருதுறவற சபையினருக்கு இடையே மலர்ந்து வளர்ந்த ஓர் உறவின் கதை. இந்த கதைக்குள்ளும் சில சங்கதிகள் உண்டு. அமலமரித்தியாகிகளுக்கும் திருக்குடும்ப சபையினருக்கும் நிறுவுனர்களாயிருந்த இயூஜின் டீ மசனெட்டுக்கும் பீற்றர் பியன்வெனு நோ ஆய்க்கும் உள்ள சகோதரத்துவ புரிந்துணர்வில் ஒரு காத்திரமான தேவையை நோக்கி வளர்க்கப்பட்டு இன்றுவரை நீடித்து, வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட உயிரோட்டமான ஒரு கதை. இக்கதையை வடிவமைக்க நான் தூயஆவியின் துணையோடு தொடங்கியபோது என் மனத்திரையில் ஒரு சினிமாப் பாடலின் சிலவரிகள் நினைவுக்கு வந்து, அதைப் பதிவு செய்யும்படி என்னைத் தூண்டிக் கொண்டு இருந்தது.

“சந்திப்பு நிகழ்வது கண்டு – சிலர்
சந்திக்கும் இடங்களும் உண்டு
சொந்தங்கள் ஆவது உண்டு – அது
தொடர்கதையாவதும் உண்டு...”

ஆம், அது உண்மைதான். 19ம் நூற்றாண்டில் பிரான்சியப் புரட்சியின் விளைவாக, நாடு பலவகையிலும் நலிவுற்றிருந்தது. பல குழப்பங்களுள் உடன் செய்யவேண்டியிருந்த பல தேவைகளுக்கு பதிலளிக்க வேண்டிய காலகட்டத்தில் பிரான்ஸ் நாட்டு மக்கள் இருந்தனர். அவர்கள் வாழ்வில் அமைதியையும், புத்தம் புதிய மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தும் இலட்சியத்துடன், அக்கால கட்டத்தில் பிரான்சில் போர்டோவில் இருந்த ஒரு குருவாகிய பீற்றர் பியன்வெனு நோ ஆய் அடிகளார் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கும் தூரநோக்குடன் 1820இல் திருக்குடும்ப சபையை நிறுவினார். இச்சபைக்குரிய ஒழுங்குகள் அதே காலங்களில் தயாரிக்கப்பட்டு 1825இல் போர்டோ மறைமாவட்ட ஆயரினது

அங்கீகாரத்தைப் பெற்றது. இச்சபை 1831இல் திருச்சபையின் சட்ட ரீதியான நிறுவனம் என்னும் நிலைக்கு உயர்த்தப்பட்டது.

யாழ்ப்பாண திருத்தூது மாநிலத்தின் (Apostolic Vicariate) முதல் அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் ஒறாசியோ பெற்றக்கினி ஐரோப்பிய குருமாரின் உதவி நாடி ஐரோப்பா எங்கும் அலைந்த பின் அமலமரித் தியாகிகளின் சபையை நிறுவிய ஆயர் இயூஜின் டீ மசனெற்டிடம் விடுத்த உருக்கமான வேண்டுதல் காரணமாக 1847இல் அமலமரித்தியாகிகளின் சபையினர் யாழ். திருத்தூது மாநிலத்தில் பணியாற்ற வந்தனர். ஆவியின் உந்துதலால் அவ்வப்போது அசைக்கப்பட்ட ஓர் இறைவாக்கினர்போல எமது திருக்குடும்ப சபை நிறுவுனர் பீற்றர் பியன்வெனு நோ ஆய், ஆன்மீக ஆதரவையும், சகோதரத்துவ ஆதரவையும் தார்மீகப் பொறுப்புடன் இறையரசுப் பணியில் சேர்ந்து பயணிக்கவும் மிக அவசியமான வேளைகளில் ஆலோசனைகளை வழங்கவும் 1858இல் அமலமரித்தியாகிகளுடன் எமது சபையை இணைத்துக் கொண்டார். “இந்த இணைப்பே” திருக்குடும்ப சபையினர் இலங்கையின் வட பகுதியில், குறிப்பாக எம் யாழ். மண்ணில் பணியாற்றுவதற்கும், பின் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்குப் பணியை பரவலாக்கம் செய்யவும் வழியை ஏற்படுத்திய ஓர் முக்கிய காரணியாகும்.

ஆயர் ஸ்ரீபன் சமேரியா எம் சபை நிறுவுனரிடம் விடுத்த வேண்டுகோள் காரணமாக 1862ம் ஆண்டு கார்த்திகை மாதம் 2ம் திகதி யாழ் மண்ணுக்கும் ஏன் இலங்கை முழுவதற்கும் ஆசீர்வாதங்கள் அபரிமிதமாகப் பொழியப்பட, இறைவன் திட்டமிட்ட நாள் ஆகும். இந்த நல்ல நாளில்தான் ஐரோப்பிய 06 சகோதரிகள் யாழ்ப்பாணத்தில் அன்புடன் தம் தடங்களை ஆழப்பதித்த நாள். உண்மையில் திருக்குடும்ப சபையினரின் யாழ். வருகையில் அமலமரித்தியாகிகள் சபையினருக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பு உண்டு என்பதை யாரும் எக்காலத்திலும் மறுக்கவோ, மறக்கவோ மாட்டார்கள்.

இதையொட்டி 1861ம் ஆண்டு, “தந்தை பியன்வெனு எக்காலத்திற்கும் உரியவர்” என்ற நூல் இவ்வாறு கூறுகின்றது.